பக்கங்கள்: பத்து

Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி
VALAMPURI

விலை ரூபா.7.00

சங்கு 05 | வள்ளுவர் ஆண்டு 2035 | மாசி 07 | வியாழக்கிழமை | (19-02-2004) | தொலைபேசி - 2223378 | ஒலி 62

ராம்கோ சீமெந்து
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது.





விடுதலைப்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுடன் மலையக மக்கள் முன்னணித் தலைவர் பெ.சந்திரசேகரன் நிற்பதையும், மக்கள் முன்னணித் தலைவர் மனோகணேசன் தலைமையிலான குழுவினர் கலந்துரையாடுவதையும் படங்களில் காணலாம்.

# சமாதானப் பேச்சு வார்த்தை விரைவில் ஆரம்பிக்கப்படும்

## வாஷிங்டன் கூட்டத்தில் தீர்மானம்

(டோக்கியோ)

இலங்கைக்கு உதவி வழங்கும் நடவடிக்கைகள், டோக்கியோ பிரகடனத்தின் பிரகாரம சமாதான நடவடிக்கைகளின் முன்னேற்றத்துடன் இணைந்ததாக அமையும் என அமெரிக்க இராஜாங்கத் திணைக்கள செயலாளர் ரிச்சர்ட் பௌச்சர் அறிக்கை ஒன்றின் மூலமாக குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்கத்திற்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் தடைப்பட்டுள்ள பேச்சுவார்த்தைகளை வெகுவிரைவில் மீண்டும் ஆரம்பிக்குமாறு அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை கடந்த ஆண்டு டோக்கியோவில் நடைபெற்ற இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டில் இணைத் தலைமை வகித்த ஜப்பான், நோர்வே, அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் ஆகியவற்றின் பிரதிநிதிகள் கலந்துகொண்ட வாஷிங்டன் மீளாய்வுக் கூட்டத்தில் தொடர்ந்தும் இலங்கைக்கான உதவிகளை வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் ஏப்ரல் இரண்டாம் திகதி நடைபெறும் பாராளுமன்றத் தேர்தல் சுதந்திரமானதும், நேர்மையானதுமாக அமையும் என தாம் எதிர்பார்ப்பதாக இந்தக் கூட்டத்தில் நம்பிக்கை வெளியிடப்பட்டுள்ளது. (த)

# சந்திரசேகரன் – மனோகணேசன் நேற்று தமிழ்ச்செல்வனுடன் சந்திப்பு

(கிளிநொச்சி)

மலையகத்தில் தமிழ் மக்கள் செறிவாக வாழும் இடங்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடனும், ஏனைய இடங்களில் நிலைமைகளுக்கு ஏற்ற வகையிலும் தேர்தலில் போட்டியிடப் போவதாக மலையக மக்கள் முன்னணியின் தலைவர் பெ.சந்திரசேகரன் தெரிவித்துள்ளார்.

நேற்று விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளா சு.ப தமிழ்ச்செல்வனுடன் ஒரு மணிநேர கலந்துரையாடலை நடத்திய பெ.சந்திரசேகரன் சந்திப்பின் முடிவில் இதனைத தெரிவித்தார்.

தமிழர் தாயகத்தில் ஒரு அணியில் போட்டியிட்டு தமிழ்த் தேசியத்தை வலுப்படுத்தும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் மலையகத்தில் தமிழர் செறிவான மாவட்டங்களில் மலையக மக்கள் முன்னணி போட்டியிடும். தமிழ் மக்கள் செறிவு குறைந்த இடத்தில்

(10ம் பக்கம் பார்க்க.)

# இந்திய மீனவர் உண்ணாவிரதம்

(யாழ்ப்பாணம்)

தம்மை விடுதலை செய்யு மாறுகோரி சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இந்திய மீனவர்கள் கடந்த திங்கட் கிழமை முதல் சாகும் வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இலங்கைக் கடற்பரப்பில் சட்டவிரோதமான முறையில் அத்துமீறி மீன்பிடித்துக்கொண்டிருந்த வேளையில் கைதுசெய்யப்பட்டு யாழ். சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள

(10ம் பக்கம் பார்க்க)

## வேட்பாளர்களை நிறுத்தாது

# புலிகளுக்கு இடம்விட்டு நாம் ஒதுங்குவோம்!

## தனது கட்சியிடம் கேட்கிறார் சங்கரி

(நமது நிருபர்)

**கடந்த காலங்களில் பல இன்னல்களுக்கு முகம் கொடுத்தவர்களுக்கு வேட்பாளர் பட்டியலில் இடம் கொடுக்க வேண்டும். இதற்கு நீங்கள் இணங்காத பட்சத்தில் எமது கட்சி வேட்பாளர்கள் போட்டியிடாமல் வேட்பாளர்கள் தெரிவை விடுதலைப் புலிகளிடம் ஒப்படைத்து நாம் அனைவரும் அந்த வேட்பாளர்களுக்கு முழு ஒத்துழைப்பையும் கொடுப்போம். இவ்வாறு தமிழர் விடுதலைக் கூட்டணி தலைவர் வீ.ஆனந்தசங்கரி தனது கட்சியிடம் கேட்டுள்ளார்.**

தமிழர் விடுதலைக் கூட்டணியின் தேர்தல் நியமனக்குழு கொழும்பில் நேற்றுக்காலை தலைவர் வீ.ஆனந்தசங்கரி தலைமையில கூடியபோதே அவர் மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்துள்ளார். இது தொடர்பாக அறிக்கை ஒன்றையும் அவர் விடுத்துள்ளார். அந்த அறிக்கையில தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

தேர்தல் நியமனக் குழுக்கூட்ட ஆரம்பத்தில் வேட்பாளர்களின் விண்ணப்பங்கள் சம்பந்தமாக ஆராயப்பட்டபோது செயலாளர்

(10ம் பக்கம் பார்க்க)

# முகமாலைச் சோதனைச் சாவடி மாலை 6.30 மணிக்கே மூடப்படும்

## பலாலி படைத் தலைமையகம் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

முகமாலை இராணுவச் சோதனை நிலையம் இன்று வழமைபோல் 6.30 மணிக்கு மூடப்படும் என்று பலாலி பாதுகாப்பு நடவடிக்கைத் தலைமையகம் அறிவித்துள்ளது.

மகாசிவராத்திரி தினத்தை முன்னிட்டு 17-ம், 18-ம், 19-ம் திகதிகளில் முகமாலை இராணுவச்சோதனை நிலையம் இர்வு 9 மணிவரை திறந்திருக்கும் என பாதுகாப்பு நடவடிக்கைத் தலைமையகம் முன்னர் அறிவித்திருந்தது. எனினும் சோதனைச் சாவடியில் இருந்து 6.30 மணிக்கு கண்காணிப்புக்

(10ம் பக்கம் பார்க்க.)

# வன்னி மாவட்டத்தின் கூட்டமைப்பு வேட்பாளர்கள்

(வவுனியா)

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட வேட்பாளர் நியமனம் ஓரளவு உறுதியாகி விட்டதாகத் தெரியவருகிறது.

இதன்படி முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் நான்கு பேரும் 5 புதுமுகங்களும் வேட்பாளர் பட்டியலுக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளதாக அறிய முடிகிறது.

(10ம் பக்கம் பார்க்க)

## ஒன்பது எம்.பிக்களைத் தெரிவு செய்ய

# யாழ்.மாவட்டத்தில் வாக்களிப்பதற்கு 6,44, 279 வாக்காளர் தகுதி

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் 9 நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தெரிவுசெய்வதற்கு 6 லட்சத்து 44 ஆயிரத்து 279 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

இதற்கமைய நடைபெறவுள்ள பொதுத்தேர்தலில் வாக்காளர்கள் வாக்களிப்பதற்கு வசதியாக 582 வாக்குச் சாவடிகள் நிறுவப்படவுள்ளன.

கோப்பாய்த் தேர்தல் தொகுதியில் 60, நல்லூரில் 53, சாவகச்சேரி 51, பருத்தித்துறை 43, ஊர்காவற்றுறை 47, யாழ்ப்பாணம் 45, உடுப்பிட்டி 53, மானிப்பாய் 62, காங்கேசன்துறை 58, வட்டுக்கோட்டை 57, கிளிநொச்சி 53 என வாக்குச்சாவடிகள் அமைக்கப் படவுள்ளன.

அத்துடன் இத்தேர்தலில் தொகுதிவாரியாக கோப்பாயில் 61 ஆயிரத்து 403 வாக்காளர்களும் நல்லூரில் 67 ஆயிரத்து 672 வாக்காளர்களும் ஊர்காவற்றுறையில் 51 ஆயிரத்து 94 வாக்காளர்களும் வட்டுக்கோட்டையில் 61 ஆயிரத்து 283 வாக்காளர்களும் காங்கேசன்துறையில் 64 ஆயிரத்து 434 வாக்காளர்களும் மானிப்பாயில்

(10ம் பக்கம் பார்க்க.)

# தமிழ்ச் செல்வனுடன் கூட்டமைப்பு சந்திப்பு

(கிளிநொச்சி)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கும் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுக்குமிடையிலான மற்றுமொரு சந்திப்பு நாளை நடைபெறவுள்ளது.

இச்சந்திப்பு கிளிநொச்சியில் உள்ள அரசியல்துறை நடுவப்பணியகத்தில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் எதிர்வரும் ஏப்ரல் 2-ந் திகதி நடை

(10ம் பக்கம் பார்க்க)

# கூட்டமைப்பு 23-ந் திகதியன்று வேட்பு மனு தாக்கல் செய்யும்!

(யாழ்ப்பாணம்)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எதிர்வரும் 23ஆம் திகதியன்று வேட்பு மனுக்களை தாக்கல் செய்யும் என கூட்டமைப்பின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம.கே.சிவாஜிலிங்கம் நேற்றிரவு வலம்புரிக்குத் தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் கட்சித் தலைவர்கள் இம்முடிவை நேற்றுக் கொழும்பில் கூடி எடுத்ததாகத் தெரிவித்த அவர் யாழ். மாவட்ட வேட்பாளர்களைத தெரிவு செய்வது குறித்து நாளை யாழ்ப்பாணத்தில் கூடி முடிவு எடுக்க உள்ளதாகவும் கூறினார்.

எதிர்வரும் 23 ஆம் திகதிக்கு

(10ம் பக்கம் பார்க்க.)

# பிள்ளைகளின் பள்ளி வாழ்வில் எதிர்கொள்ளும் பிரச்சினைகள்

பிள்ளைகள் அனைவரும் பள்ளிக்குச் செல்லும் வயதில் சிற்சில விஷயங்களுக்கேற்ப மாறவேண்டியவர்களாக உள்ளனர். பள்ளிக்கூடச் சூழலுக்கு ஏற்ப வேண்டிய மாற்றங்களைச் செய்வதில் சிக்கல்களைச் சந்திக்கும் குழந்தை இயல்புக்கு மாறான குணமுடைய அல்லது சுகவீனமான குழந்தை என்று பொருள் கொள்ளக் கூடாது. ஒரு சில குழந்தைகளும் ஒரு சில பெற்றோர்களுமே வாழ்வு முழுவதும் சிக்கலைச் சந்திக்காமல் செல்கின்றவர்களாக இருக்கின்றனர்; ஆனால், பெரும்பாலான பெற்றோர்களும் பெரும்பாலான குழந்தைகளும் ஏதாவது ஒரு சமயம் சிக்கல்களைச் சந்திக்கவே செய்கின்றனர். 5 வயது வரை தாயாரோடும் பிற - விரல்விட்டு எண்ணிவிடக்கூடிய குடும்ப உறுப்பினர்கள் மற்றும் பிள்ளைகளோடு மட்டுமே பழகிவந்த குழந்தை, பள்ளிக்குச் சென்றதும் வகுப்பறையில் இருபது முப்பது சிறுவர் சிறுமியருடனும் ஓர் ஆசிரியையுடனும் காலம் தள்ளுவதற்குப் பழகிக் கொள்ள சில சிக்கல்களைச் சந்திப்பது இயல்பே.

புதிதாகப் பள்ளிக்குச் செல்லும் குழந்தை அடம்பிடிப்பது ஓர் இயல்பான பண்பே என்பதையும், அது ஒரு கோளாறல்ல என்பதையும் பெற்றோர்கள் உணரவேண்டியது மிக அவசியம். எதையும் முன்னுணர்ந்து செயல்படும் பெற்றோர்கள் சமய சந்தர்ப்பத்திற்குத் தக்கபடி நடந்து கொள்வதினால் பல தொல்லைகளுக்குத் தீர்வுகாண முடியும். சில சூழ்நிலைகளை மருத்துவர்கள் அல்லது பள்ளி ஆசிரியர்களுடன் பேசி அறிந்து மாற்றி அமைத்துக்கொள்ளலாம். சாதாரண வழிமுறைகளில் ஒரு சிக்கல் தீர்க்கப்படமுடியவில்லையெனில், இளையோர் உளவியல் அறிந்த நபர்கள் மூலம் தீர்ப்பது தகுந்தது.

ஒரு குழந்தை தன் பெற்றோரின் மரபு வழியான பண்புகளைப் பெற்று, முதலாண்டில் நடத்துகின்ற வழிகளின் படியும் நடக்கின்றது. அதன் மனவளம் பெற்றோருடனான நல்லுறவு, குடும்பம் அமைந்துள்ள இடம் மற்றும் சூழல், உடன் பிறந்தோரிடம் கொண்ட நல்லுறவு ஆகியவற்றைச் சார்ந்து அமைகிறது. ஐந்து ஆண்டுகள் ஆனதும் ஒரு குறிப்பிட்ட நாளில் முற்றிலும் வேறுபட்ட வாழ்க்கை முறையைப் பின்பற்றும் படி குழந்தை பணிக்கப்படுகிறது. மற்ற பிள்ளைகளுடன் சமரசம் செய்து கொள்ளவேண்டும், மற்ற பிள்ளைகள் அதனைப் போல் இருக்க மாட்டார்கள். ஆசிரியைக்கு ஒரு வேளை அவ்வளவாக அனுபவம் இல்லாமலும் இருக்கலாம். நிறைய பிள்ளைகளுடன் பேசி, பழகி பொழுதைக் கழிக்க வேண்டிய நிலை. எல்லாவற்றிற்கும் மேலாக வீட்டுச் சூழலை முற்றிலும் இழக்கவேண்டிய நிலையும் இருக்கலாம்.

### பள்ளிக்குச் செல்ல அஞ்சுதல்

அநேகமாக எல்லாப் பிள்ளைகளுமே எதாவது ஒரு சமயம் அரை மனத்தோடுதான் பள்ளிக்குச் செல்கிறார்கள். இப்படிப் பள்ளிக்குச செல்ல விருப்பமின்மை அல்லது அரை மனம் ஆகியவற்றை இயல்பான ஒன்றாக எடுத்துக்கொள்ள வேண்டும். இந்த விருப்பமின்மை ஏதோ ஒருநாள்த் தான் இருக்கும். இது சில நாட்கள் அல்லது வாரங்கள், சில சமயம் ஆண்டுகள் கூடத்தொடரும். முதலில் பள்ளிக்குச் செல்ல அஞ்சும் குழந்தை, பிறகு ஒவ்வொரு வகுப்பு மாறும் போதும் புதிய ஆசிரியர், புதிய சூழலைச் சந்திக்க அஞ்சும்.

தாய்மார்கள் குழந்தைகளுடன் போதிய நேரத்தைச் செலவிடாத தால் ஆரம்பத்தில் பள்ளிக்குச் செல்வதறகு முரண்டு பிடிப்பதுண்டு. முதல் குழந்தையும் கடைசிக் குழந்தையும் இவ்வாறு முரண்டு பிடிப்பதுண்டு. பள்ளிக்குச் செல்லும் முதல்நாள் குழந்தை அழுது ஆர்ப்பாட்டம் செய்யும். அனுபவமுள்ள ஆசிரியர் குழந்தையை அமைதிப்படுத்தி தாய்மாருக்கும் எடுத்துச்சொல்லி எல்லாவற்றிற்கும் ஒரு முற்றுப்புள்ளி வைப்பார். தாய்மார்களும் தம் குழந்தைகள் பள்ளிக்குச் செல்ல வேண்டும் என்பதில் உறுதிகாண்பிக்கவேண்டும். வாழ்வின் வேறுபணிகளில் கவனம் செலுத்த வேண்டுமென்றாலும் இது குடும்பம் முழுவதையும் கலக்கும் விஷயம் தான்.

வீட்டுச் சூழலைப் பிரிய முடியாததாலும், ஆசிரியர் பிடிக்காதவராக இருந்தாலும் குழந்தை பள்ளிக்குச் செல்ல விருப்பம் காட்டாமல் இருக்கலாம். பள்ளியில் போடப்படும் மதிய உணவு, ஒழுங்கு, கட்டுப்பாடு போன்றவை பிடிக்காத




தாலும் இப்படிச் செய்யலாம். பள்ளிக்குச் சென்ற பிறகு இயற்கைக் கடன் தொல்லை தரும் போது ஆசிரியரைக் கேட்க குழந்தை பயப்படலாம். தன்னைவிட வயது அதிகமான, முரட்டுப் பிள்ளைகளை விளையாட்டு அரங்கில் சந்தித்து அவர்களாலும் சிக்கல்கள் வரலாம்; அதற்கும் பயப்படலாம்.

பெற்றோர் சுகவீனமடைதல் அல்லது புதிதாகப் பிறந்த குழந்தை ஆகியவையும் காரண மாகலாம். புதிய குழந்தை பிறந்ததும் தாயின் கவனம் அதின் மீது அதிகமாகச் செல்வது இந்தக் குழந்தையின் பாதுகாப்புணர்வுக்கு அச்சுறுத்தலாகிவிடலாம்.

### வெட்கப்படும் பிள்ளை

பிள்ளையின் வயதுக்கேற்ப வெட்கப்படுதலின் பொருள் மாறுபடும். பலவித வெட்கங்கள் எல்லாப் பிள்ளைகளுக்கும் வருவது இயல்பு. ஓராண்டு ஆகும் போது குழந்தை வெட்கத்தைக் காண்பிக்கிறது. இதுவும் மரபுவழி வரும் இயல்பே. பெற்றோர்களைப் போலவே பிள்ளைகளும் பல வித மன நிலைகளை உடையவர்கள்; சில பிள்ளைகள் தம் பெற்றோரைப் போல் தனிமை விரும்பிகளாக உள்ளனர். பல பிள்ளைகள் வெட்கப்படுபவர்களாக இருந்தாலும் இல்லாவிட்டாலும் பள்ளிக்குச் செலகிற புது அனுபவத்தின் போது சிறிது தயக்கம் காட்டுகிறார்கள்.

மூத்த குழந்தை மற்றவர்களை விட வெட்கப்படும் இயல்புடையதாக இருப்பதுண்டு. முதல் குழந்தை பெற்றோரால் அதிக அன்புகாட்டி வளர்க்கப்படுவதால் புதிய நபர்கள் புதிய சூழல்களைக் கண்டு பயப்படுகிறது. தனிமையான இடங்களில் வாழ்ந்தால் தம் வயதுடைய மற்றவர்களோடு பழகும் வாய்ப்பு குறைகிறது; எனவே அதிக பிள்ளைகளைக் காணும் போது வெட்கம் வருகிறது.

பெற்றோர்கள் மற்றவர்களுடன் தாராளமாகக் கலந்து பழகாதவர்களானால், பிள்ளைகளும் அதே வழியில் செல்வது இயல்பு. வெட்கப்படும் நபரின் பிள்ளை எல்லோருடனும் கலகலப்பாக எப்படிப்பழகும்?

வெட்கப்படும் குழந்தையின் உண்மையான உணர்வுகளை அறிந்து செயல்படவேண்டும். குழந்தை வெட்கப்பட்டாலும் மகிழ்ச்சியுடன் இருக்கமுடியும். தனிமை நிறைவளிக்கும் பிள்ளையை மற்ற பிள்ளைகளும் உள்ளபடியே பொறுத்துக் கொள்ளத்தான் செய்வார்கள். வீட்டில் ஒரு மாதிரியும் பள்ளியில் தனிமையாகவும், விருப்பம், மகிழ்ச்சியின்றியும் இருந்தால்தான் குழந்தையின் வெட்கப்படும் இயல்பு குறித்துக் கவலைப்பட வேண்டும். இதைப் போக்க வழிகாணவேண்டும்.

ஒரு குறிப்பிட்ட அளவு மற்ற பிள்ளைகளோடு பழக நம் பிள்ளைகளை ஊக்குவிக்கவேண்டும். இதற்கு பள்ளி நேரத்தில் ஆசிரியர் உதவலாம். படிப்பில் சிக்கல் நேரிடுவதைக் களையவேண்டும். அதே போல பந்து விளையாட்டு, மிதிவண்டி ஓட்டுதல், கயிறு தாண்டுதல் போன்ற எதையும் கற்பதில் பிரச்சினைகள் தோன்றலாம். அதையும் களையவேண்டும்.

### ஆக்கிரமிப்பு மனப்பான்மையுள்ள முரட்டுப் பிள்ளை

குழந்தைகளிடம் ஏதாவது ஒரு வகை ஆக்கிரமிப்புக் குணம் வளர்வது இயல்பே. எல்லாப் பிள்ளைகளும் மன முதிர்ச்சி அடைகையில் இடையில் ஆக்கிரமிப்பு மனப்பான்மை இருப்பது இயல்பு. இரண்டாவது வயது வாக்கில் கோபம் கொப்புளித்துப் பெருகுகிறது. ஞானமுள்ள பெற்றோர்கள் பக்குவமாக நடப்பர். இல்லையேல் குழந்தை ஆர்ப்பாட்டக் குழந்தையாக மாறும். பள்ளி ஆண்டுகளில் பெற்றோரும் ஆசிரியர்களும் இப்படிப்பட்ட பிள்ளைகளால் தொல்லை அடையவேண்டி நேரிடும். இதனால் பெற்றோருக்கு அவப்பெயர் கிட்டும். அடங்காத பிள்ளைகள் என்று பேர் எடுப்பது பையன்களே. வளர்ப்பு முறை இதை மேலும் அதிகரிக்கலாம். கட்டுப்பாடற்ற வளர்ப்பு கட்டுப்பாடற்ற பிள்ளையை உருவாக்கும்; ஆனால் இது மற்ற பிள்ளைகளாலும் பெரியோர்களாலும் ஏற்கப்படமுடியாதது. சில குடும்பங்களில் இயற்கையிலேயே மற்றவர்களைவிட அதிக ஒழுங்கு கட்டுப்பாடு இருப்பதுண்டு; அதேபோல சில குடும்பங்களில் உணர்வுகளுக்கு அதிக சுதந்திரம் அளிப்பது உண்டு. ஒழுங்கு கட்டுப்பாடற்ற குடும்பத்துப் பிள்ளைகள் ஆக்கிரமிப்பு மனப்பான்மை உடையவர்களாகின்றனர்.

வேறு சில பிள்ளைகள் மகிழ்ச்சியின்மையாலும் நம்பிக்கைக் குறைவாக நடத்தப்பட்டாலும் ஆக்கிரமிப்புக் குணமுடையவர்களாகின்றனர். சில சமயம் வீட்டில் அதிக அடக்குமுறைக்கு ஆளாகும் குழந்தை, பள்ளியில் மற்ற பிள்ளைகளை அடக்க முற்படுகிறான். இதைக்கண்டு அவன் பெற்றோர்களே வியப்படைவதுண்டு.

ஆக்கிரமிப்புக் குணமுடைய சில குழந்தைகள் மிக அறிவாளிகளாகவும் இருப்பதுண்டு. வீட்டிலும் பள்ளியிலும் விளையாடும் இடங்களிலும் பிள்ளைகள் ஒழுங்குடன இருக்கவேண்டும். இது குறைந்தால் சில பிள்ளைகள் கட்டுப்பாடிழந்து, அப்பாவிப் பிள்ளைகள் துன்பப்படுவர்.

ஆக்கிரமிப்புக் குணமுடைய பிள்ளை மீது அதிக கவனம் செலுத்த வேண்டும். அவனது நற் செயல்களைப் பாராட்டவும் தீய செயல்களைக் கண்டு கொள்ளாமல் தவிர்க்கவும் வேண்டும். அப்போது படிப்படியாக நல்ல பிள்ளையாகிவிடுவான்.

### துடிப்புள்ள பிள்ளை

எல்லாக் குழந்தைகளும் துறுதுறுப்பானவைதான்; என்றாலும் மிகத் துடிப்பான பிள்ளைகளும் உண்டு. இவர்களால் வீட்டில், பள்ளியில் பெரியவர்களிடையில் அல்லது பிள்ளைகள் நடுவில் தொல்லைகள் உருவாகின்றன. ஒரு காலத்தில் மூளைக்கோளாறு காரணமாக அதிகத் துடிப்புள்ள பிள்ளைகள் இருப்பதாக எண்ணப்பட்டது. இதற்கு ஆதாரம் இல்லை. குழந்தை பிறக்கும் போதும் பிறந்த பிறகும் மூளைக்குப் பாதிப்பு உண்டாவதுண்டு. இப்படிப் பாதிக்கப்பட்ட குழந்தைகள் சில சமயம் துடிப்புள்ளவையாக இருப்பதுண்டு. பெண்களை விடப் பையன்களிடம் துடிச்சல் நான்கு மடங்கு அதிகமாக உள்ளது. குழந்தையாய் இருக்கும் போது குறைந்த நேரம் தூங்கி, கொஞ்சமாக உண்டு குறைவான எடை போடும், எந்நேரமும அழுதபடி இருக்கும் குழந்தை துடிப்பு மிகுந்ததாகிவிடுகிறது. இப்படிப் பட்ட குழந்தைகள் ஆக்க வேலைகளைவிட அழிவு வேலைகளை மிகுதியாகச் செய்யும். அடிகடி விபத்துக்களில் சிக்கும். பெற்றோர்களால் சமாளிக்க இயலாது.

கைக்குழந்தையாயிருக்கும் போதே இப் பிரச்சினை முளைவிட்டாலும் பள்ளி நாட்களில் தான் முத்திரை பதிக்கிறது. மற்ற பிள்ளைகளிலிருந்து மாறு பட்டிருதல், பாடங்களில் கவனம் செலுத்தாமல் இருத்தல், வகுப்பறையில் தொல்லைகள் தருவது - இவைகளை ஆசிரியர் கண்டுகொள்வார். பெற்றோரும் ஆசிரியரும் ஆலோசித்து இப் பிரச்சினையைத் தீர்க்க முற்படவேண்டும்.

இப்படிப்பட்ட பிள்ளையை இளையோர் உளவியலாரிடம் அல்லது மருத்துவரிடம் காட்டி ஆவன செய்யவேண்டும். குழந்தை படிப்பதிலும், புதிய திறன்களைக் கற்பதிலும் பின்தங்கி இருப்பது வழக்கம். மந்தமாக இருப்பதோடு, வேடிக்கையாகவும் இருப்பதுண்டு.

### கேலி செய்தல்

ஆரம்பப் பள்ளிப் பிள்ளைகளிடம் கேலி செய்து வேடிக்கை பார்க்கும் பழக்கம் குறைவு. இது உயர்நிலைப் பள்ளிப் பிள்ளைகளிடம் தான் மிகுதி.

கேலிக்குள்ளான பிள்ளை மற்றப் பிள்ளைகளிலிருந்து மாறுபட்டவன். அவனைப்பார்க்க அப்பாவி போலவும், ஒதுங்கி நிற்பவனாகவும் தோன்றலாம். அண்மைப் பார்வை போன்ற பார்வைக் கோளாறுகள் அவனுக்கு இருக்கக்கூடும். அல் லது. அறிவாளியாகவும், கலை ஆர்வம் உடையவனாகவும் இருக்கக் கூடும்.

பள்ளி நேரத்தைவிட விளையாட்டு நேரங்களில் தான் கேலி செய்வது நடக்கிறது. கேலிக்குள்ளான குழந்தை வீட்டிலோ, பள்ளியிலோ அது பற்றிப் பெரிதாக எடுப்பதில்லை. அது அவனுக்கு வெட்கமூட்டும் அனுபவமாக இருக்கிறது. அவனது நடத்தையில் மாற்றமும், இனம் தெரியாத பயங்களுக்கும் ஆளாகியுள்ளதையும் ஆசிரியர் அல்லது பெற்றோர் நிச்சயம் அறிந்து கொள்வர்.

கேலிக்குள்ளான குழ்ந்தைக்குத் துணிவூட்டி பிரச்சினைக்கு முடிவு கட்ட வேண்டும்; மூடிவைக்கக் கூடாது. கேலிக்கு ஆளாகியவர்களை அவன் குறிப்பிடத் தயங்கினாலும் அவன் கேலிக்கு ஆளானது முக்கியம். கேலி செய்பவர்கள அனைவரும் கோழைகள். அவர்களை தலைமை ஆசிரியர் நேரில் கண்டித்தால் அது ஒரு முடிவுக்கு வந்துவிடும். இதற்கும் பெற்றோர் - ஆசிரியர் ஒத்துழைப்புத் தேவை.

பள்ளி முடிந்த பிறகு கேலி செய்தல் நடப்பது வழக்கமானால், கேலி செய்பவனின் பெற்றோர் பள்ளிக்குச் சென்று அவனைக் கையோடு அழைத்துவர வேண்டும். அப்போது அவன் தன் கூட்டாளிகள் இல்லாத சூழலில் கேலி செய்யமுடியாது.

### பாலியல் நெறி பிறழ்ச்சிகள்

வயது வந்தவர்கள் சிலர் ஆரம்ப பள்ளிப் பிள்ளைகளைப் பாலியல் வக்கிரங்களுக்கு ஆட்படுத்தும் வழக்கம் உடையவர்களாக உள்ளனர். இது அதிகமாக நடை பெறாவிட்டாலும் பிள்ளைகளைப் புதியவர்களுடன் பழகலாகாது என்று எச்சரிக்கவேண்டும். பள்ளி வளாகத்தில் சம்பந்தமில்லாத நபர்கள் இருப்பது உடனடியாகப் பள்ளி நிர்வாகத்திற்கு அறிவிக்கப்படவேண்டும்.

புதியவர்களுடன் பழகாதே, அவர்கள் தரும் தின் பண்டங்கள், இனிப்புகளை வாங்காதே, அவர்கள் அழைக்கும் இடங்களுக்குச் செல்லாதே (இலவச சவாரி மூலம்) என்றெல்லாம் சொன்னால் குழந்தைகதுப்புரியாது. ஆனால் உண்மைகளை உறுதியாக எடுத்துரைத்து அழுத்திக்கூறவேண்டுமே யொழிய, அவனை அச்சுறுத்தக் கூடாது.

புதிய மனிதர்கள் உங்கள் பிள்ளையைத் தங்கள் வண்டிகளில் ஏற்றிச் சென்று திரும்பியிருந்தால், அவன் சொல்வதைக் கவனமாகக் கேட்டு, உடனடியாகப் பள்ளியிலும் காவல் நிலையத்திலும் புகார் செய்யவேண்டும்.

### உணவுப் பிரச்சினைகள்

குடும்பத்தில் ஏதாவது ஒரு குழந்தை - அநேகமாக மூத்த குழந்தை - உண்பதில் அடம்பிடிக்கும் குழந்தையாக இருக்கக் கூடும். ஒரு வயதாகும் போது, அக் குழந்தை சரியான சாப்பாடு உண்ணத்தவறுவது பெற்றோர்களுக்குப் பெரும் கவலையைத் தரலாம். இதனால் இளைய குழந்தைகள் மூத்ததைவிட உயரமாகவும் எடை கூடியும் வளர்வதுண்டு.

குடும்பத்தில் மூத்த பிள்ளை எப்போதும் அதிக கவலை ஏக்கக் களால் சூழப்படுகிறது. போதிய உணவு உண்ணாததால் சோகை படிந்து காணப்படுகிறது. அவன் உண்ணும் அளவு குறித்து ஒன்றும் சொல்லாத உறவினர்கள் மற்றும் குடும்ப நண்பர்களுடன் இருக்கும் போது உணவு உண்ணும் விஷயத்தில் அதிக அடம் பிடிப்பதோ ஆர்ப்பாட்டம் செய்வதோ இல்லை. பள்ளிக்குச் செல்லத் தொடங்கியதும் வீட்டுச் சூழலை விட்டு பகல் உணவு உண்ணும் சந்தர்ப்பங்கள் வருகிறது. பள்ளிக் கூடத் தோழர்கள் அல்லது பணியாளர்களை விட்டு அவன் நன்றாக உண்ணும் படி தடி போடும் போது பழைய கதைதான் திரும்பவும். பிள்ளை சாதாரணமாகச் சாப்பிடுவான்; இறுதியில் நன்கு உண்டு விரைவாக வளருவான் என்ற நம்பிக்கையை வளர்த்துக் கொள்ளப் பெற்றோர்கள் முயலவேண்டும்.

பிள்ளைக்கு பால், பழச்சாறுகள் போன்ற நொறுக்குத் தீனிகள் எதுவும் உணவு இடைவேளைகளில் கொடுக்காமல் இருந்தாலே போதும், அவனுக்குத் தானாகப் பசியெடுக்கும். □

எஸ். யசோதா

# முதல் சுற்றுப் போட்டியில் பங்களாதேஷ் இலங்கை, இங்க்லாந்து, பாக்.அணிகள் வெற்றி

பங்களாதேஷில் நடைபெற்று வரும் 19வயதிற்குட்படட அணி களுககிடையிலான உலகக்கிண்ண கிரிக்கெற் சுற்றப்போட்டிகளில் நேற்று முன்தினம் நடைபெற்ற முதற் சுற்றுப் போட்டிகளில் பங்களாதேஷ், இலஙகை, இங்கிலாந்து மற்றும் பாகிஸ்தான் அணிகள் வெற்றிபெற்றுள்ளன.

பங்களாதேஷ் அணிக்கும் ஸ்கொட்லாந்து அணிக்கும் இடையில் நடைபெற்ற போட்டியில், பங்களாதேஷ் அணி 9விக்கெற்றுக்களால் வெற்றிபெற்றுள்ளது. இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய ஸ்கொட்லாந்து அணியினர் 30:2 ஓவர் முடிவில் தமது சகல விக்கெற்றுக்ளையும் இழந்து 95ஓட்டஙகளை மட்டுமே பெற்றனர். இதில் ஸ்கொட்ஷன் 42ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தார். பந்து வீச்சில் பங்களாதேஷ் அணி வீரர்களான இனாம் உல்ஹக் யூனியர் 4விக்கெற்றுக்களையும், எஸ்.ஹுசைன் 3விக்கெற்றுக்களையும் கைப்பற்றினர். பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி ஒருவிக்கெற்றை மட்டும் இழநது வெற்றியிலக்கான 96ஓட்டங்களைப் பெற்று வெற்றியீட்டியது.

மேலும் இலங்கை அணிக்கும் கனடா அணிக்கும் இடையில் நடைபெற்ற போட்டியில் இலஙகை அணி 9விக்கெற்றுக்களால் வெற்றிபெற்றுள்ளது. இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய கனடா அணியினர் 31.1ஓவர் முடிவில் தமது சகல விக்கெற்றுக்களையும் இழந்து, 81ஓட்டங்களை மட்டுமே பெற்றுக்கொண்டனா. பந்து வீச்சில் இலங்கை அணிசார்பில் திறமையாக பந்து வீசி 27ஓட்டங்களை விட்டுக் கொடுத்து, 5விக்கெற்றுக்களைக் கைப்பற்றினார். பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணியினர் 16.1ஓவர் முடிவில் ஒரு விக்கெற்றை மட்டும் இழந்து 84ஓட்டங்களைப் பெற்று வெற்றியீட்டினர். இலங்கை அணியின் துடுப்பாட்டத்தில் ஹார்ஷ விதாரண ஆட்டமிழக்காமல் 52ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தார்.

இதேவேளை, இங்கிலாந்து அணிக்கும் உகண்டா அணிக்கும் இடையில் நடைபெற்ற மற்றுமொரு போட்டியில் இங்கிலாந்து அணி 213 ஓட்டங்களால் வெற்றிபெற்றுள்ளது. இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி நிர்ணயிக்கப்பட்ட 50ஓவர் முடிவில் 7விக்கெற் இழப்பிற்கு 259ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது. பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய உகண்டா அணி 46ஓவர்களில் தமது சகல விக்கெற்றுக்களையும் இழந்து, 46 ஓட்டங்களை மட்டுமே பெற்று படு தோல்வியைத் தழுவியது.

மேலும் பாகிஸ்தான் அணிக்கும் அயர்லாந்து அணிக்கும் இடையில் நடைபெற்ற போட்டியில் பாகிஸ்தான் அணி 8விக்கெற்றுக்களால் வெற்றிபெற்றது. இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய அயர்லாந்து அணி 47.5ஓவர் முடிவில் தமது சகல விக்கெற்றுக்களையும் இழந்து 142 ஓட்டங்களைப். பெற்றுக்கொண்டது.

தொடர்ந்து பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி 25.2ஓவர் முடிவில் 2விக்கெற்றை மட்டும் இழந்து 146ஓட்டங்களைப் பெற்று வெற்றியீட்டியது.

(தி-121,68)



சென்னையில் சிறப்பு வீரர்களுக்காக அமைக்கப்பட்ட புதிய விளையாட்டு விடுதியை, விளையாட்டுத்துறை அமைச்சர் திறந்து வைத்து விளக்கேற்றுவதைப் படத்தில் காணலாம்.





அண்மையில் நடைபெற்ற நெடுந்தீவுப் பிரதேச செயலகப் பிரிவின் விளையாட்டு விழாவில் பிரதம விருந்தினர் ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் உரையாற்றுவதையும், அருகில் விருந்தினர்கள் அமர்ந்திருப்பதை முதலாவது படத்திலும், வெற்றி பெற்ற உதயசூரியன் விளையாட்டுக்கழகத்துக்கு பிரதம விருந்தினர் பரிசில்வழங்குவதை இரண்டாவதுபடத்திலும் காணலாம்.

## விளையாட்டுச் செய்திகள்

# டெனிஸ் வீரர் தரப்படுத்தலில் ரோஜர் பெடரர் முன்னிலையில்

சர்வதேச டெனிஸ் சம்மேளனத்தினால வெளியிடப்படும் உலக டெனிஸ் வீரர்களுக்கான தரப்படுத்தல் பட்டியலில் சுவிற்ஸர்லாந்து வீரரான ரோஜர் பெடரர் 5ஆயிரத்து 170புள்ளிகளைப் பெற்று முதலாம் இடத்திற்கு முன்னேறியுள்ளார். இதேவேளை, மூன்றாம் இடத்தில் இருந்த அமெரிகக வீரரான அன்றி ரொடிக் 4ஆயிரத்து 390 புள்ளிகளைப் பெற்று 2ஆம் இடத்திற்கு முன்னேறியுள்ளார்.

எனினும் 2ஆம் இடத்தில் இருந்த ஸ்பெயின் வீரான யுவான் ஹார்லஸ் பெரேரா 4ஆயிரத்து 345 புள்ளிகளைப் பெற்றுள்ளமையால் 3ஆம் இடத்திற்கு பின்தள்ளப்பட்டுள்ளார். மேலும் ஆர்ஜென்டீனா வீரரான குளோமோ கொரியா, அமெரிக்க வீரரான ஆந்திரே அகாசி மற்றும் ஜேர்மன் வீரரான ஜேய்னர் செடலர் ஆகிய மூவரும் முறையே தொடர்ந்து 4ஆம், 5ஆம், 6ஆம் இடஙகளை வகித்துவருகின்றனர்.

(தி-68)

# மக்ராத்தின் கடைசி முயற்சி வெற்றி அளிக்குமா?

இலங்கையுடனான டெஸ்ட் போட்டிகளில் விளையாடவுள்ள அவுஸ்திரேலிய அணியில் தனது பெயரை இடம் பெறச்செய்யும் கடைசி முயற்சியில் அவுஸ்திரேலிய அணியின் வேகப் பந்து வீச்சாளர் கிளைன்மக்ராத் ஈடுபட்டுள்ளார்.

உபாதை காரணமாக கடந்த 7 மாத காலமாக கிரிக்கெற் போட்டிகளில் ஒதுங்கியிருந்த மக்ராத் தற்போது தான் முழுமையாக குணமடைந்துள்ளதாகத் தெரிவித்துள்ளார். கடந்த வாரத்தில் பல தடவைகளில் பயிற்சியில் ஈடுபட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ள மக்ராத், காயம் ஏற்பட்டுள்ள கணுக்காலில எவ்வித உபாயையும் இல்லை எனவும் தெரிவித்தார்.

நீண்ட காலத்தின் பின் தான் திடகாத்திரமாக இருப்பதாகவும் விளையாடுவது குறித்து கடந்த சில வாரங்களாக தேர்வாளர்களுடன் கலந்தாலோசித்து அவர்களின கருத்துக்களை அறிந்து கொள்ள உத்தேசித்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(தி-121)

# மெய்வன்மைப் போட்டிகள்

(ஏழாலை)

எழுவைதீவு முருகவேள் வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி எதிர்வரும் 24ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பி.ப.2.00மணிக்கு வித்தியாலய அதிபர் எஸ்.சிவபாலன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில், தீவக வலயம் பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஜி.வி.இராதாகிருஷ்ணன், வண.பிதா யோ.அ.யேசுதாஸன், எழுவைதீவு றோ.க.த.க.பாடசாலை அதிபர் மு.சத்தியசீலன், அனலைதீவு தெற்கு அ.த.க.பாடசாலை அதிபர், வீ.ஓங்காரலிங்கம் ஆகியோர் விருந்தினராக கலந்துகொள்ளவுள்ளனர்.(தி-90)

* * *

(சுண்டுக்குளி)

பாஷையூர் புனித அந்தோனியார் றோமன் கத்தோலிக்க மகளிர வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை வெள்ளிக்கிழமை பி.ப.2.00 மணிக்கு வித்தியாலய அதிபர் திருமதி எம்.சி.செல்வநாயகம் தலைமையில் நடைபெறவுள்ளது.

(தி-110)

(வடலியடைப்பு)

சாவகக்சேரி மகளிர் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி எதிர்வரும் 21ஆம் திகதி சனிக்கிழமை பி.ப.1.30 மணிக்கு கல்லூரி அதிபர் சி.குணநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் முன்னாள் இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ளார்.(தி-21)

* * *

(கோப்பாய்)

கோப்பாய் மகாவித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை வெள்ளிக்கிழமை பி.ப.2.00மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில், யாழ்.மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் பிரதம விருந்தினராகவும் வலி.கிழக்கு அரசியல்துறைப் பொறுப்பாளர் து.கிரி மற்றும் கிராம அலுவலர் எஸ்.முத்துக்குமாரசுவாமி ஆகியோர் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்ளவுள்ளனர்.

(தி-79)

# ஆஸி. —இலங்கை அணிகளின் கடந்தகால இணைப்பாட்டங்கள்

இலங்கை அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையில் நாளை வெள்ளிகிழமை சர்வதேச ஒருநாள் போட்டிகள் ஆரம்பமாகவுள்ளன. கடந்த காலங்களில் இவ்விரு அணிகளும் மோதிக்கொணட போட்டிகளில் ஒவ்வொரு விக்கெற்றுக்காகவும பெறப்பட்ட அதி கூடுதலான இணைப்பாட்டங்களை மீடுப்பார்ப்பது சாலச் சிறந்ததே.

(தி-121)

**அவுஸ்திரேலிய அணி இலங்கை அணிக்கெதிராக பெறப்பட்ட அதிகூடுதலான இணைப்பாட்டங்கள்**

| விக்கெற்றுக்கள் | ஓட்டங்கள் | வீரர்கள் | மைதானம் | காலப்பகுதி |
|---|---|---|---|---|
| 1வது விக்கெற் | 189 | மார்க் டெயவர் -மார்க்வோ | பேர்த் | 1995/96 |
| 2வது விக்கெற் | 224 | டீன்ஜோன்ஸ் அலன் வோர்டர் | அடிலையிட் | 1984/85 |
| 3வது விக்கெற் | 121 | பொண்டிங்-கில்கிறிஸ்ற் | மெல்போன் | 1998/99 |
| 4வது விக்கெற் | 117 | வோல்டர்ஸ்-சப்பல் | ஓவல் | 1975 |
| 5வது விக்கெற் | 159 | பொண்டிங்-பெவன் | மெல்போன் | 1995/96 |
| 6வது விக்கெற் | 61 | ஷேன்லீ-பெவன் | பேர்த் | 1998/99 |
| 7வது விக்கெற் | 73 | டொடமெயிட்-வெலட்டா | சிட்னி | 1987/88 |
| 8வது விக்கெற் | 46 | பிரெட்லி-வோர்ண் | ஆர்.பிரேமதாஸ | 2002/03 |
| 9வது விக்கெற் | 25 | பொண்டிங்-மக்ராத் | ஆர்.பிரேமதாஸ | 1996 |
| 10வது விக்கெற் | 63 | பிக்கல்-வட்பென் | சிட்னி | 2002/03 |

**இலங்கை அணி அவுஸ்திரேலிய அணிக்கெதிராக பெறப்பட்ட கூடுதலான இணைப்பாட்ட ஓட்டங்கள்**

| விக்கெற் | ஓட்டங்கள் | வீரர்கள் | மைதானம் | காலப்பகுதி |
|---|---|---|---|---|
| 1வது விக்கெற் | 237 | ஜயசூரியா-அத்தப்பத்து | சிட்னி | 2002/03 |
| 2வது விக்கெற் | 116 | களுவிதாரண-அத்தப்பத்து | ஹோபர்ட் | 1998/99 |
| 3வது விக்கெற் | 147 | குருசிங்க-அரவிந்த | கொழும்பு | 1992 |
| 4வது விக்கெற் | 112 | அத்தபத்து-மஹேல | பிறிஸ்பன் | 2002/03 |
| 5வது விக்கெற் | 139 | மெண்டிஸ்-அரவிந்த | சிட்னி | 1984/85 |
| 6வது விக்கெற் | 115 | மஹாநாம-அரவிந்த | கொழும்பு | 1996 |
| 7வது விக்கெற் | 90 | சந்தன-மஹாநாம | அடிலையிட் | 1998/99 |
| 8வது விக்கெற் | 54 | அரவிந்த-தில்ஹார | செஞ்சூரியன் | 2002/03 |
| 9வது விக்கெற் | 50 | டி.அஸ்லிஸ்-லப்ரோய் | பேர்த் | 1987/88 |
| 10வது விக்கெற் | 31 | ரணதுங்க-புஸ்பகுமார | மெல்போன் | 1995/96 |

# ஈராக்கிய தேர்தல் திட்டமிட்டபடி

# யூன் 30 ஆம் திகதி நடத்தப்படுமா?

(நியூயோர்க்)

அமெரிக்கத் தலைமையிலான கூட்டுப்படைகளிடம் இருக்கும் ஈராக்கின் அதிகாரத்தை ஈராக்கிய மக்



களிடம் ஒப்படைப்பது சம்பந்தமான அறிக்கை இந்தவாரத்தில் தமக்குக்கிடைக்கும என்று ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் கோபி அனான் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

இருந்த போதிலும் ஈராக்கில் வாழும் ஷியா முஸ்லிம்களினால் பெரிதும் விரும்பப்படும் தேர்தல்கள் ஏற்கனவே திட்டமிட்டபடி யூன் மாதம் 30 ஆம் திகதியளவில் இடம்பெறுவது இயலாத விடயம் என்று ஐக்கிய நாடுகள் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இருந்த போதிலும் நிரந்தர் அரசாங்கம் ஒன்றை அமைப்பதற்கான தேர்தல்கள் இந்த வருட இறுதி அளவில் அல்லது அடுத்த வருட முற்ப்கு தியில் இடம்பெறலாம் என்றும் அவர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

இத்தகைய சூழ்நிலையில் யூன் மாதத்துக்கு முன்னர் அதிகார மாற்றம் இடம்பெற வேண்டுமானால் வேறுவழிவகைகளைக் கோபி அனான் அறிவிக்க வேணடிய நிலைமை உருவாகியுள்ளது.

தற்போதைய ஆளும் மன்றத்தை விரிவு படுத்தல் அல்லது புதிய மன்றம் ஒன்றை நியமித்தல் என்பன இவற்றில் சிலவாகும்.

இதற்கிடையில் ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் கோபி அனான் நாளை ஜப்பானுக்கான விஜயம் ஒன்றை ஆரம்பிக்கவிருக்கின்றார்.

வாஷிங்டனில் அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் கொலின் பவல் தகவல் தருகையில் ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் பரிந்துரைகளை அமெரிக்கா ஏற்றுக் கொள்ளும் நிலையில் உள்ள போதிலும் திட்டமிட்டபடி தேர்தல் நடாததப்படுவதற்கான யூன் மாதம் 30ஆம் திகதி வரை கால எல்லையில் மாற்றம் செய்யப்படுவதற்கு அனுமதிக்கபடமாட்டாது எனத்தெரிவித்தார்.

ஈராக்கிய மக்களிடம் நிறுவாகத்தை ஒப்படைத்து இடைக்கால அரசாங்கம் ஒன்றை அமைப்பதற்கான தினமே யூன் மாதம் 30ஆம் திகதி என்றும் அவர் குறிப்பிட்டார். (து-9)

## சந்திரனுக்கு இந்திய விண்கலம்

2006 -2007 ஆம் ஆண்டளவில் சந்திரனுக்கு 380 கோடி ரூபா செலவில் இந்திய விண்கலம் செயற்கடுத்தப்படுமென இந்திய விண்வெளி ஆராய்சி நிறுவனத்தின் தலைவர் ஜீ.மாதவன் நாயர் தெரிவித்தார்.

சந்திரனுக்கு அணுப்பப்படும் விண்கலம் ரொபார்ட்டுகள் மூலமே இயக்கப்படும் என்றும் அதில் விண வெளி வீரர்கள் இருக்க மட்டார்கள் என்றும் அதில் பெருத்தப்பட்டிருக்கும் கருவிகளின் உதவியலேயே சந்திரனைப் பற்றிய தகவல்கள் சேகரிக்கப் பட்டு ஆய்வுகள் மேற்கொள்ளப்படும் என்றும் கூறினார். (து)



முன்னாள் மத்திய அமைச்சர் மேனகா காந்தியும், அவரது மகன் வருண் காந்தியும் பா.ஜ.க.வில் இணைந்தனர். மேனகாவும், வருணும் புதுடில்லியில் பிரதமர் வாஜ்பாயை அவரது இல்லத்தில் சந்தித்து பூங்கொத்துக் கொடுத்தனர்.

# புஷ்ஷின் இலக்குக்கு முகம் கொடுக்கத் தயார்

## ஜனநாயக் கட்சி வேட்பாளர்

(விஸ்கொன்ஸின்)

ஜனாதிபதி புஷஷினதும் அவர் தம் ஆதரவாளர்களதும் இலக்குக்கு உள்ளாகியுள்ளேன் என்பதை நான் நன்கு உணர்கிறேன். அவர்கள் என்னை நோக்கி எதையும் வாரி வீசலாம் எதறகும் நான் முகம் கொடுக்கத் தயாராக இருக்கிறேன்.

இவ்வாறு அமெரிக்க ஜனநாயகக் கட்சியின் முன்னணிப் போட்டியாளர் செனட்டர் ஜோன் கெர்ரீ விவாதம் ஒன்றில் குறிப்பிட்டார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை விஸ்கோன்ஸில் மில்வோக்கியில் இவவிவாதம் நிகழ்ந்தது. விஸ்கோன்சில் நடைபெற்ற ஜனாதிபதி வேட்பாளர் நியமனப் போட்டிகளில் கொர் முன்னணி வகிக்கின்றார்.

இதுவரை 16 மாநிலங்களில் வேட்டபாளர் நியமனத்துக்கான போட்டிகள் நிகழ்ந்துள்ளன.

கெர்ரீ இப்போட்டிகளில் 14 இடங்களில் வெற்றிவாகை சூடியுள்ளாா. இறுதியாக வெற்றி பெற்ற இரு இடங்கள் நெரடாவும், வாஷிங்கடன் டி.சி.யு.மாகும்.

இதேவேளை,கொரீயின் நெருங்கிய போட்டியாளர்களான ஹோவாடும் செனட்டர் ஜோன்எட்வாட்ஸும் போட்டிக்களத்தில் இருந்து ஒதுங்க வேண்டிய நிலைக்கு நிர்ப்பந்திக்கபட்டார்கள்.

மற்றொரு வேட்பாளர் டீன் இதுவரை எந்தவொரு வேட்பாளர் நியமனப் போட்டியிலும் வெற்றி பெறவில்லை. போட்டியில் இருந்து ஒதுங்குவதா? இல்லையா? என்பது குறித்து மாறுபட்ட அபிப்பிராயங்களைத் தெரிவித்துவருகின்றார். (து-9)

# அணுவாயுத சோதனைக்கு வெளி நாட்டுக் குழுக்கள்

## அனுமதிக்க முடியாதென பாக். அதிபர் அறிவிப்பு

(இஸ்லாமபாத்)

பாகிஸ்தானில்அணுவாயுத சோதனை, அணுப்பாவனை ஆகியன தொடர்பான, சோதனை முதலியவற்றை மேற்கொள்வதற்காக வெளிநாட்டுக குழுக்களை பாகிஸ்தானுக்குள் அனுமதிக்கப் போவதில்லையென அந்நாட்டு ஜனாதிபதி பர்வேஷ் முஷாரப் தெரிவித்துள்ளார்.

எந்த நாட்டிலாவது அணுவாயுதம் தொடாபான சோதனைகள் முழுமையாக மேற்கொள்ளப்படடுள்ளனவா எனக் கேள்வியெழுப்பிய அவர் ஒரு நாட்டின் உணர்வோடு கலந்த அணுக கொள்கையை இன்னொரு நாடு பரிசோதிப்பதற்கு ஏன் அணுமதிக்க வேண்டும் எனவும் வினாவினார்.

ஈரான், லிபியா, தென்கோரியா ஆகிய நாடுகளுக்கு தகவல்களை விற்றார் என குற்றம் சாட்டப்பட்டு பாகிஸ்தான் ஜனாதபதியால் பொது மன்னிபபு அளிக்கப்பட்டுள்ள அணு விஞ்ஞானி அப்துல் காதிர்கான் வெளியிட்ட சாச்சைக்குரிய கருத்துக்களின் பின்னர் உள்ளூர் ஊடகம் ஒன்றுக்கு அளித்த பேடடியிலேயே ஜனாதிபதி முஷாரப் இவ்வாறு தெரிவித்துள்ளார்

ஈரான், லிபியா, தென்கோரியா ஆகய நாடுகளுக்கு பாகிஸ்தான் அணுவாயுத இரகசியங்களை விற்பனை செய்தது அந்த நாட்டின் அரசியல் தலைவர்களுக்கு தெரியும் என அப்துல் காதிர்கான் கடந்த வாரம் கருத்து வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தககது (து-9)



ரியோடி ஜெனீரோவில் நடைபெற் ற விழாவில் தங்களது செல்ல நாய்களுக்கு விதவிதமான ஆடை, அலங்காரங்களை செய்து கொண்டு வந்திருந்தனர் பலர். விழாவில் பங்கேற் ற ஒரு நாய்

# தேர்தல் பிரசாரத்துக்கு விமானப்படை விமானங்கள

## துணைப்பிரதமருக்கு அனுமதி வழங்கலாம்


(புதுடில்லி)

தேர்தல் பிரசாரத்துக்கு விமானப் படையின் விமானங்களைப் பயன்படுத்திக் கொள்ளும் உரிமை பிரதமருக்கு வழஙகப்பட்டு இருப்பது போல, துணைபபிரதமர் அத்வானிக்கும் வழங்கப்பட வேண்டும் எனற பிரதமர் வாஜ்பாயின் கோரிக்கைக்கு தி.மு.க. தலைவர் கருணாநிதி ஆதரவு தெரிவித்துள்ளார்.

சென்னையில் நேற்று அவர் விடுத்த அறிககையில் துணைப் பிர தமர் என்ற முக்கிய பிரமுகர்களின் பாதுகாப்பு என்ற கோணத்தில் சிந் திக்கும் போது,

தேர்தல் பிரசாரத்துக்குச் செல்லும் போது உரிய பாதுகாப்புத் தர வேண்டும் என்பதைதான் ஏற்றுக் கொள்வதாக அவர் கூறியுள்ளார்.

அரசோ, கட்சியோ இதற்கு ஆகும் செலவை ஏற்பதே பொருத்தமானது என்றும் கருணாநிதி தெரிவித்தார். (து-9)



டோக்கியோவின் சின் னோ நகரில் நடைபெற்று வரும் பனிச்சிற்ப திருவிழாவில், பனிக்கட்டிகளால் உருவாக்கப்பட்ட கட்டிடம். இந்த பனிச்சிற்ப திருவிழா பெப்ரவரி 22ஆம் திகதி வரை நடைபெறும்.

# அ.தி.மு.க – 33, பா.ஜ.க – 7

## தொகுதிப் பங்கீடு

(சென்னை)

வரும் மக்களவைத் தேர்தலில் தமிழ் நாட்டில் 6 மக்களவைத் தொகுதிகள பாரதிய ஜனதாக் கட்சிக்கு ஒதுக்கப்பட்டது என்றும் இதுதவிர புதுச்சேரித் தொகுதியில் பா.ஜ.க. போட்டியிடும் என்றும் அனைத்திந்திய அண்ணா தி.மு.க பொதுச் செயலர் செல்வி ஜெயலலிதா நேற்று சென்னையில் வெளியிட்ட ஓர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

வடசென்னை, சிதம்பரம், தர்மபுரி, நீலகிரி, கோயம்புத்தூர், நாகர்கோவில் ஆகிய ஆறு இடங்களில் பா.ஜ.க. போட்டியிடும் என்று இருகட்சிகளுக்கும் இடையில் உடன்பாடு ஏற்பட்டுள்ளது.

மத்திய அமைச்சர் திருநாவுக்கரசாின் சொநதத் தொகுதியான புதுக்கோட்டை பா.ஜ.கவுக்கு. ஒதுக்கப்படவில்லை.

இது பற்றி பா.ஜ.கட்சியிடம் வினாவியதற்கு திருநாவுக்கரசரின் சேவை சிறந்த முறையில் பயன்படுத்திக் கொள்ளப்டும்என்று தமிழ நாடு பா.ஜ.க. தலைவர் சி.பி. ராதா கிருஷ்ணன் கூறியுள்ளார்.

பா.ஜ.க, அனைத்து இந்திய அண்ணா தி.மு.க தொகுதிப் பங்கீட்டுப் பேச்சுவார்த்தைகள் எந்தவிதத் தடங்கலும் இன்றி சுமுகமான முறையில் நடை பெற்றது என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (து-9)

# காவல் துறையின் பணிகளுக்கு அத்வானி பாராட்டு

(புதுடில்லி)

நாட்டின் முன்னுள்ள பயங்கரவாதத்தையும் சட்டவிரோதக் குடியேற்றத்தையும் சமாளிப்பதில் காவல் துறையின் பங்கைத் துணைப் பிரதமர் எல்.கே. அத்வானி வெகுவாகப் பாராட்டியுள்ளார்.

புதுடில்லியில் நடைபெற்ற காவல் துறையின் ஆண்டு தின நிகழ்ச்சியில் அவர் உரையாற்றினார். பயங்கரவாதம், சட்டவிரோதக் குடியேற்றம் என்பவற்றைச் சமாளித்து தேசிய பாதுகாப்பை உறுதி செய்வதில் காவல் துறையின்பங்கு முன் எப்போதையயும்விட இப்பொழுது அதிக முக்கியத்துவம் பெறுவதாக அவர் கூறினார்.தேசியப் பாதுகாப்பில் புதுடில்லி காவல்துறையின் வெற்றிகரமான பணி குறித்தப் பெருமிதம் கொள்ளவதாக அவர் மேலும் கூறியுள்ளார். (து)

# இலங்கை மக்களின் ஒற்றுமையை அரசியல் வாதிகளே சீர்குலைத்தனர்

## கவிஞர் இக்பால் குற்றச்சாட்டு

(கொழும்பு)

**மக்களின் தேவைகளை உணராது செயற்பட்ட அரசியல் வாதிகளுக்கு மக்கள் நல்லதொரு பாடம் புகட்ட வேண்டும் அதற்கான சந்தர்ப்பமும் தற்போது கிடைத்திருக்கின்றது.**

**இவ்வாறு இலக்கியவாதியான கவிஞர் இக்பால் தெரிவித்துள்ளார்.**

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தினால் நடாத்தப்பட்டு வரும் 'விடியும் வேளை' நிகழ்வில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கையில்,

தேர்தல் காலங்களில் மக்களிடம் சென்று பொய் வாக்குறுதிகளை வழங்கி அவர்களின் வாக்குகளைப் பெற்றுக்கொள்ளும் அரசியல் வாதிகள் தேர்தலில் வெற்றி பெற்றதும மக்களை மறந்து செயற்படத் தொடங்கிவிடுவார்கள்.

மீண்டும் ஓர் தேர்தலின் போதே மக்களை நினைப்பார்கள்.

இப்படியான அரசியல் வாதிகளை மக்கள் இனங்கண்டு அவர்களுக்கு நல்லதொரு பாடம் புகட்ட வேண்டும்.

இத்தகைய அரசியல் இலாபங்களைத் தேடும் அரசியல் வாதிகள் இருக்கும்வரை எமது நாடு முன்னேறாது.

இத்தகைய சுயநலம் மிக்க அரசியல் வாதிகளால் தான் எமது நாட்டின் முக்கிய பிரச்சினையான இனப் பிரச்சினை கூட தீர்க்கப்படாமல் இருக்கின்றது.

எமது நாட்டிலே மிக ஒற்றுமையாக வாழ்ந்து வந்த சிங்கள மற்றும் தமிழ், முஸ்லிம் மக்களிடையே இன பாகுபாட்டைக் காட்டி அவர்களிடையே வளர்ந்துவந்த ஒற்றுமையை சீர்குலைத்தவர்கள் கூட இந்த அரசியல் வாதிகள் தான்.

### அரசியல் வாதிகளின் ஆதிக்கம்

தோதல் காலங்களிலேயே இவர்களின் அட்டாகசங்கள் அதிகரிக்கும் "தமிழ் மக்களின் உரிமைக்காகக் குரல் கொடுப்போம்" என்று தமிழ் அரசியல் வாதிகளும் "முஸ்லிம் மககளின் உரிமைக்காக குரல் கொடுப்போம் என்று முஸ்லிம் அரசியல் வாதிகளும் "சிங்கள மக்களின் உரிமையைப் பாதுகாப்போம்" என்று சிங்கள அரசியல் வாதிகளும கூச்சலிடுவார்கள். இங்கேயே இவர்கள் இனப் பாகுபாட்டை வளர்க்க ஆரம்பித்து விடுவார்கள்.

இலங்கையில் வாழும் மக்களின் முக்கிய பிரச்சினை இனப் பிரச்சினைதான் என்பது இவர்களுக்கு நன்றாகத் தெரியும்.

எனவே "இலங்கை மக்களின் பிரச்சினையைத் தீர்ப்போம், அவர்களின் உரிமைக்காகக் குரல் கொடுப்போம், அவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவோம் என்று இந்த அரசியல் வாதிகள் பிரசாரஞ் செய்யலாம் தானே?

அவர்கள் அப்படிச் செய்ய மாடடார்கள். இனங்களுக்கிடையே பிளவை ஏற்படுத்திக் கொண்டால் தான், அவாகள் அரசியலில் நின்று தாக்குப்பிடிக்க முடியும். தமது பதவிகளை நிலைநிறுத்த முடியும்.

### அரசியல் யாப்பு

இத்தகைய அரசியல் வாதிகளின் செயற்பாட்டுக்கு பின்னணியாக இருப்பது இலங்கையின் அரசியல் யாப்பே.

அரசியல் யாப்பை காரணம் காட்டி சிங்கள அரசியல் வாதிகள சர்வாதிகாரப் போக்கில் நடந்து கொண்டு வருகிறார்கள்.

இலங்கையில் வாழும் ஏனைய இன மக்களின் நலன் பற்றி அவர்கள் எள்ளவும் நினைப்பதில்லை. சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் ஒற்றுமையாக வாழுவதை அவர்கள் விரும்புவதில்லை.

இதனால் அவர்களுக்கு ஏற்ற வகையில் தாளம் போடவேண்டிய நிலைக்கு தமிழ், முஸ்லிம் அரசியல் வாதிகளும் தள்ளப்பட்டுள்ளார்கள்.

இதேவேளை, இங்கு அரசியல் வாதிகள் என்று குறிப்பிடும்போது, எல்லா அரசியல் வாதிகளையும் குறிப்பிடவில்லை.

ஒருசில அரசியல் வாதிகள் தான் இன ஒற்றுமைக்காக இன்றும் பாடுபட்டு வருகிறார்கள. அவர்களை மக்கள் இனங்கண்டிருப்பார்கள். இத்தகைய நல்ல அரசியல் வாதிகளும் இந் நாட்டில் இருப்பதால்தான் எமது நாடு முற்றாக அழிந்து போகாது இவ்வளவிலேனும் இருக்கிறது.

உலகிலே நாலு வகையான குணங்களை உடைய மனிதர்கள் இருக்கின்றார்கள்.

### நாலு குணம்

தான் "வாழாவிட்டாலும் மற்றவர்கள் வாழ வேண்டும்".

* "தானும் வாழ வேண்டும் மற்றவனும் வாழ வேண்டும்"
* "தான் மட்டும் வாழவேண்டும்"
* "தான் மட்டும் வாழ வேண்டும் மற்றவன் வாழக்கூடாது"

ஆகிய இந்த நாலு வகையான குணங்களைக் கொண்டவர்களே முதலிலும், இரண்டாவதிலும் குறிப்பிடட குணங்களை உடையவர்கள். விரல்விட்டு எண்ணக்கூடிய வகையிலேயே உலகில் வாழ்ந்து வருகின்றார்கள்.

இக் கருத்தினை நான் கூறவில்லை. இலக்கிய நூல்கள் பல எடுத்துக் கூறயிருக்கின்றன. இலக்கிய நூல்களில் கூட இன ஒற்றுமை அர்பபணிப்பு, தியாகம், சுய நலம என்பனபற்றி ஆழமாக வரையப்பட்டிருக்கின்றன.

எமது நாட்டில் உள்ள இலக்கிய வாதிகள் கூட, இன ஒற்றுமையைத்தான் தமது ஆக்கங்களில் வலியுறுத்தியுள்ளார்கள்.

இலக்கிய வாதிகளின் இனப் பாகுபாடில்லை. அவர்களிடம் சுய நலம் இல்லை. எல்லா இனமக்களையும் நேசிப்பவர்கள்.

இன ஒற்றுமையை வளர்ப்பதற்கு இலக்கிய வாதிகள் இன்றுவரை முயற்சித்து வருகின்றார்கள்.

ஆனால் அவர்களின் கருத்துக்களுக்கு, சிந்தனைகளுக்கு அரசியல் வாதிகள் மதிப்புக் கொடுபதில்லை.

இதனால் இலக்கியத்தின் ஊடாக இன ஒற்றுமையை வளர்ப்பதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றார்கள்.

அத்துடன் இலக்கியத்தின் ஊடாக மக்களிடையே நல்லுறவை ஏற்படுததும் இலக்கிய வாதிகளின் முயற்சிகளுக்கு சில இனவாதிகள் தடையாக இருந்து வருகின்றார்கள்.

### இலக்கியவாதிகள்

இதற்கிடையில் இன ஒற்றமைக்காக இலக்கியவாதிகள் மட்டும் தான் குரல்கொடுத்து வருகின்றார்கள். ஏனைய புததிஜீவிகள், கல்விமான்கள் எல்லாம் இதுவிடயத்தில் அக்கறை காட்டுவதில்லை.

"நான் மட்டும் வாழ்ந்தால்போதும்" என்ற குணங்களை உடைய இவர்கள் பிறரைப்பற்றி சிந்திக்க மாட்டார்கள்.

### இன விரிசல்

இந்தியாவில் இன விரிசல் ஏற்படுகின்ற போது புத்திஜீவிகள் எல்லோரும் இணைந்து அரசியல் வாதிகளுக்கு புத்தி கூறுவார்கள்.

ஆனால், இங்கு அப்படியில்லை. எமது புத்திஜீகள் எல்லோரும் அரசியல் வாதிகளுக்கு பயந்து ஒதுங்கிக் கொள்வார்கள்.

இந்த நிலைமையை அறிந்த ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இன ஒற்றுமைக்காக அத்திவாரம் இட்டபோது அதனை சில அரசியல் வாதிகள் ஏற்றுக்கொள்ளவில்லை.

இது ஒருபுறம் இருக்க தவறிளைப்பவனை தண்டிப்பவர்களே எமது நாட்டில் அதிகமாக இருக்கின்றார்கள். தவறிளைப்பவனை மன்னிக்கும் மனப்பான்மை இங்கு மிகக் குறைவாகவே இருக்கின்றது.

ஒரு மனிதன் ஒருமுறை தவறு செய்துவிட்டான் என்றால், அவனை மன்னித்து அவனுக்கு புத்திமதிகளைச சொல்லி திருத்துவதுதான் மனித பண்பு.

அவ்வாறு அவனை மன்னித்து புத்திமதிகளை சொல்லும்போது அவன் திருந்திவிடுவான்.

அதனை விடுத்து அவனைத் தண்டித்தால் அவன் மீண்டும் தவறிழைக்க முற்படுவானே தவிர, திருந்தி நடக்கும் சாத்தியம் குறைவாகவே இருக்கும். எனவே இந்த நாட்டில் உள்ள பண்பாட்டைப பாதுகாத்துக் கொள்ளும் வகையில் சகல மக்களும் மண்ணித்துக்கொள்ளும் பழக்கத்தை வளர்த்துக்கொள்ள வேண்டும்.

இதன் மூலமும் இன ஒற்றுமையை வளர்த்துக்கொள்ளலாம் என்றார். (தி-60,10)

# அமைச்சர்களைப் பதவி நீக்கும் ஜனாதிபதியின் நடவடிக்கை தொடரும்

## அரசியல் வட்டாரங்கள் தகவல்

(கொழும்பு)

பாராளுமன்றக் கலைப்பைத் தொடர்நது அமைச்சர்களைப் பதவி நீக்கம் செய்யும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் அதிரடி நடவடிக்கைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டுவருவதாக அரசியல் வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

அமைசசர்கள் வரிசையில் இறுதியில் ஜோன் அமரதுங்க பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளதைத் தொடர்ந்து, இன்னும் சில அமைச்சர்களைப் பதவி நீக்கம் செய்வதற்கும், ஏனைய அமைச்சர்களின் அதிகாரங்களைக் கடுமையாக முடக்கி, அவர்களின் கீழ் பணியாற்றும் உழியர்களின் தொகையையும் முழுமையாகக் குறைப்பதற்கு ஜனாதிபதி முடிவெடுத்துள்ளார்.

தேர்தல் பிரசாரங்கள் சூடுபிடிக்கும் போது அமைச்சர்கள் தங்களது அதிகாரங்களைப் பாவித்தோ அல்லது அவர்களது அரச ஊழியர்களின் உதவிகளைப் பாவித்தோ பிரசாரங்களை முடிக்கிவிடலாம. என்ற அச்சம் காரணமாகவே, ஜனாதிபதி இந் நடவடிக்கைகளை தொடர்ந்து மேற்கொண்டுவருகிறார்.

ஐக்கிய தேசிய முன்னணியின் அமைச்சரவையில் எந்த அமைச்சும் பறிக்கப்படுவதற்கு முன்னர், கிட்டத்தட்ட100 அமைச்சர்கள் பதவி வகித்தார்கள். இவர்களது தேர்தல் பிரசாரம் கடுமையாக மேற்கொள்ளப்பட்டால், தனது கட்சிக்கு ஆபத்தாகிவிடும் என்ற காரணத்தாலேயே ஜனாதிபதி இத்தகைய செயற்பாட்டில் இறங்கவுள்ளதாக அவ் வட்டாரங்கள் மேலும் தகவல் வெளியிட்டுள்ளன.

(தி-18

# வலி.வடக்கு மக்களை குடியமர்த்த இராணுவத்தினர் நடவடிக்கை

(ஏழாலை)

வலி.வடக்கில் இருந்து இடம் பெயர்ந்த மக்களை மீண்டும் அவர்களின் சொந்த இடங்களில் குடியமர்த்துவதற்கு இராணுவத் தரப்பில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிவிக்கப் படுகிறது.

வலி.வடக்கில் இருந்து இடம் பெயர்ந்து வாழும் மக்களை அவர்களின் சொந்த இடங்களில் குடியமர அனுமதிப்பது தொடர்பான விஷேட கலந்துரையாடல் ஒன்று நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை காலை 10.30மணிக்கு தெல்லிப்பழை பிரதேச செயலகத்தில் பிரதேச செயலர் கலாநிதி க.குணராசா தலைமையில் நடைபெற்றது.

இக் கலந்துரையாடலில் யாழ். மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் சுசில் சந்திரபால வலி.வடக்கில் இருந்து இடம் பெயர்ந்து யாழ்.குடாநாட்டில் வாழும் அனைத்துக் குடுப்பங்களினதும் முழுமையான விபரங்களை எதிர் வரும் 25ஆம் திகதிக்கு முன்னர் தம்மிடம் ஒப்படைக்கும் படி பிரதேச செயலரைக் கேட்டுக்கொண்டதுடன், இந்த நடவடிக்கைக்கு ஒத்துழைப்புத்தர மறுக்கும் உத்தியோகத்தர்கள் பற்றி விபரததையும் தனக்கு தெரியப்படுத்தும்படி கோரியுள்ளார்.

இதனையடுத்து வலி.வடக்கில் இருந்து இடம்பெயர்ந்து குடாநாட்டின் ஏனைய பிரதேச செயலர் பிரிவுகளில் வாழும் மக்களின் முழுமையான விபரங்களை திரட்டும் பணிக்கான வேலைகள் நேற்றைய தினமே ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும், கிராம அலுவல்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள் பிரதேச செயலகங்கள் தோறும் சென்று விபரங்களைத் திரட்டுவதற்கு நியமிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக் கப்பட்டுள்ளது.

இக் கலந்துரையாடலில் உயர் பாதுகாப்பு வலயத்தில் உள்ள படை அதிகாரிகள், கிராம உத்தியோகத்தர்கள், சமுர்த்தி மற்றும வெளிக்கள உத்தியோகத்தர்களும் கலந்துகொண்டனர்.

(இ-12)

# ஐக்கிய மக்கள் முன்னணியின் பதவி விபரங்கள் அறிவிப்பு

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் முதலாவது நிறைவேற்றுக் குழுக்கூட்டம் ஜனாதிபதி மாளிகையில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் முன்னணியின் பதவி விபரங்கள் வெளியிடப்பட்டன.

இதன்படி ஐககிய மக்கள் சுதந்திர முன்னணியின் தலைவியாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும் தவிசாளராக மக்கள் விடுதலை முன்னணியைச் சேர்ந்த நந்தன குணதிலகவும் செயலாளராக சுசில்பிறேமஜயந்தவும் செயற்படுவர். முன்னணியின் தேசிய அமைப்பாளராக அனுராபண்டாரநாயக்க இருப்பார் என்று முன்னணியின் செயலாளர் சுசில்பிறேமஜயந்த கூறினார்.

முன்னணியின் உப தலைவர்களாக தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவி பேரியல் அஷ்ரப்பும், மக்கள் ஐக்கிய முன்னணியின் தலைவர் தினேஷ் குணவர்த்தனவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

முன்னணியின் முதலாவது கூட்டம் எதிர்வரும் 26ஆம் திகதி அனுராதபுரம் ஸ்ரீமகா போதியின் மத வழிபாடுகளுடன் நடைபெறும்.

நேற்று முன்தினம் நடைபெற்ற கூட்டத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சார்பாக மகிந்த ராஜபக்ஷ, அமைச்சர் டி.எம்.ஜெயரத்தின, சுதந்திரக் கட்சியின் செயலாளர் மைத்திரி பாலஸ்ரீசேன ஆகியோரும், மக்கள் விடுதலை முன்னணியின் சார்பில் நந்தன குணதிலக்க, விஜித்த கேரத், விமல் ரத்நாயக்கா ஆகியோரும் கலந்து கொண்டனர். (இ)

# தேசவழமை

வரலாற்றுத்துறைப் பேராசிரியர்
சி.பத்மநாதன்
பேராதனைப் பல்கலைக்கழகம்.

## 50 தேசவழமை அதிகாரம்-8

## சிறைகளை இட்டம் பண்ணும் விதம்

கலியாணம் முடித்துப் பிள்ளையில்லாதவன் அல்லது கலியாணம் முடியாதவன் தன்னுடைய முதுசொம்மான ஒரு ஆண்சிறையை அல்லது பெண்சிறையை இட்டம் போக்குவதற்கு எண்ணினால் அந்தச்சிறை பட்டோலைப்பட்டிருக்கிற கோயிற் சட்டம்பியாருக்குத் தன் எண்ணத்தைஅறியப்பண்ணி அக்கோயிற்பற்றின் குடிசனங்களுக்கும் விசேஷமாக அந்தச் செய்கைக்குத் தடை சொல்ல விரும்புகிறவர்களும் சரியான காலத்திலே அதை அறிந்து அந்தச் சிறையிலே தங்களுக்குண்டான உரித்தைச் சொல்லத் தக்கதாக அடுத்து அடுதது மூன்று ஞாயிற்றுக் கிழமையிலே அவரதைப் பிரசித்தமாகக் கூறும்படியாகக் கேட்டுக்கொள்ளவேண்டியது. அப்படிப் பிரசித்தம் பண்ணும் காலவரையில் யாராகுதல் வந்து தடை சொன்னால், தடை சொல்லுகிறவர்களும் இட்டம் போக்கும் எசமானும் அக் காரியத்தை விசாரணை பண்ணும்படி நீதிக்காரரை நியமித்து அவர்க ளுடைய தீர்ப்புக்கு சம்மதிக்க வேண்டியது. ஆனால் விவாகம் முடித்துப்பிள்ளையில்லாத ஒருவன் தன் பெண்சாதியுடைய சீதனமாகிய ஒரு ஆண்சிறையை அல்லது பெண்சிறையை இட்டம் பண்ணிவிடவேணும் என்றால் பெண்சாதியுடைய சம்மதமுடனே அப்படி செய்யவேணும் அனறியும் விவாகம் முடியாதவன் இட்டம் போக்குவதைப் பற்றி முனசொன்ன பிரகாரம் இதிலும நடக்கவேண்டியது. அல்லாமலும் பிள்ளைகளுடைய புருஷனும் பெண்சாதியும் தங்கள் பிரியப்படி சிறைகளை இட்டம்போக்கலாம். ஒருவன் தன் வெள்ளாட்டியுடனே தொடுப்பாய் இருந்து பிறந்ததானால் அவனுடைய உரிமைக்காரரின் சம்மதமில்லாமல் அந்தப்பிள்ளையை இட்டம் ஆக்கலாம். அந்தப் பிள்ளைக்கு தன்னுடைய முசொம்மான ஆதனத்திலே தன்னுடைய தகுதிக்குத் தக்கதாகச் சொற்பமான நன்கொடை கொடுக்கலாம்.

### இட்டம் போன சிறைகளின் ஆதனத்தை உரிமையாயடைதல்

8. மேற்கூறியபடி அடிமைப்பெண் வயிற்றில் பிறந்து இட்டம் பெற்ற ஆண்சிறையென்கிலும் பெண்சிறையென்கிலும் செத்துவிட்டதேயுண்டானால் தனது மாதாவின் வழியான மறுசகோதரமான பிள்ளைகளில் ஆணென்கிலும் பெண்ணென்கிலும் ஒரு பிள்ளை இட்டம் பெற்றிருந்ததானால் அப்போது அந்தச் செத்தபிள்ளையுடைய ஆஸ்தி இந்தப்பிள்ளைக்குடையது. ஆனால் இந்தச் சகோதரர்களுக்குள்ளாக இட்டம் போனவர்கள் இல்லாதிருந்தால் காலஞ்சென்றவளுடைய ஆஸ்தி பிதாவின் திட்டமான பிள்ளைகளிருந்தால் அவர்களுக்குச் சேரும். அவர்கள் இல்லாத காலத்தில் மரணித்தவளுடைய ஆஸ்தி அதைகொடுத்தவர்களை மறுபடி சேரும். அவர்களின் பின்பு உரிமைக்காரரைச்சேரும்.

முற்காலத்திலே தமிழிராசாக்கள் காலத்தில் ஒருவழமை இருந்தது. அது இக்காலத்திலும் சோழமண்டல (ம்) முதலிய் சில விடங்களிலே இருக்கின்றது. அது, என்வென்னறால் சிறைகளை ஆட்சி பண்ணின எசமான் அந்தச் சிறைகளின் நல்ல பணிவிடையின் நிமித்தம் அல்லது வேறுநோக்கத்தினால் அவைகளில் ஒருவரை அல்லது பலரை இட்டமாயிருக்கக்கொள்ள சில காலத்தின் பிறகு இந்த இட்டம் பெற்ற சிறைகள் தங்கள் பழைய உடையவனுடைனேயென்கிலும் அவனுடைய பிள்ளைகளுடனேயென்கிலும் எதிர்த்துக்கொண்டுளாதொரு அடர்க்கேற்றமான நீதிப்பிள்ளைகளை வருத்தினதேயுண்டானால் அநத விதமான இட்டக்காரரை மறுபடியும அடிமையாக்கிவிடுவார்கள்.

இந்தத் தேசவழமைகளை நான் விளக்கி எழுதுகிற சமயத்திலே பிரதானமான குடி சனங்களிலும் முதலிமாரிலும் அநேகர் மனவியாகூலத்துடனே எனக்கறிவித்ததென்னவெனில், மேற்சொல்லிய பழைய வழமை இவ்விடத்திலே நெடுங்காலமாக நடப்பியாமல் விடப்பட்டது. தாங்கள் அறிந்த மட்டுக்குப் பறங்கிகள் காலத்திலும் உலாந்தாக்காரா காலத்திலும இந்தவிதமான அடர்ந்தேற்றமான காரியம் நடப்பித்த இட்டம் பெற்ற பேர்களை மறுபடியும் அடிமைப்படுத்தினதில்லையென்றும்,ஆதலால் இட்டம் போன சிறைகள் தங்களுக்கு நன்மைப் பகுதி செய்த தங்கள் எசமான்களுடனே எதிர்த்து மீறுதலாக நடக்கிறார்கள் என்றும் மேற்குறித்த பிராதன குடிசனங்களும் முதலிமாருஞ் சொல்லி இட்டம் போன சிறைகளின் மீறுதலை அடக்கும் பொருட்டாக அந்தப் பழைய வழமையைத் திரும்ப ஒரு திட்டமான கட்டளையாக்கும் படியாக உத்தமகத்தனுக்கு அறியப்பண்ண வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்கள். அவர்கள் கேள்விப்படி அந்தப் பழைய வழமையைத் திருப்ப ஒரு திட்டமான கட்டளையா நியமிக்கவேண்டுமென்று மிகுந்த அமைதியான ஆசாரத்துடனே உத்தமகத்தனானவர்களுக்கு அறியப்பண்ணுகிறேன்.

### அதிகாரம்-9

### வட்டிக்குப் பணங்கொடுத்தல்

### அவதிகுறித்து பணங்கடன் கொடுத்தல

1. யாதாமொருதர் ஒரு அவதிகுறித்து அந்த அவதிக்குள்ளாக அப்போது நடந்துவருகிற வழமைக்குப்படிக்கு வட்டியும் முதலும் தரும்படி பொருந்தி சில பணங்களைக் மறுபேருக்கு கடன் கொடுத்தவிடத்தில், அந்த அவதி தப்பினதேயுண்டானால் அப்போது அந்தக்கடன் கொடுத்தவன் தான் கொடுத்த பணத்திற்கு ஈடாக எழுதுவித்த காணியென்கிலும் மற்றும் ஆதனங்களையென்கிலும் விற்பித்து தன்னுடைய வட்டியும் முதலும் வேறாக்கிக் கொள்ளலாம். கடன் வாங்கினவன் ஈடாயிருக்கிறவேளை விற்க சம்மதியாதே போனால், கடன் கொடுத்தவன் கோட்டு முன்னிலையில் முறைப்பாடு பண்ணித தன் கடனுக்கீடாயிருக்கும் பொருள்களை தனது நயத்திற்காக விலைப்படுத்தக் கோட்டாரிடம் உத்தரவு பெற்றுக்கொள்ளவேணும்.

### பிணைக்காரரின் உத்தரவாதம்

2. இந்த விதமாக கடன் கொடுக்கிறதிலே பிணைக்காரருண்டாயிருந்தால் கடன் வாங்கினவன் ஒளித்துவிட்டாலும் அவன் வாங்கின கடனிறுக்கத் தகுதியில்லாமல் வறியவனாய்விட்டாலும் கடன் கொடுத்தவன் மேற்படி பிணைக்காரரிடம் அந்தக் கடனை தீர்க்கும்படி கேட்கலாம். அந்தப் பிணைக்காரர் தாங்கள் பிணை நின்ற பணம் உத்தரிக்கக் கடனாளியாயிருக்கிறார்கள். ஆனால் அந்தக் கடன் காரன் மறுபடி ஆஸ்தியுடையவனாகுங் காலத்தில் பிணைக்காரர் அவனை கோட்டிலே தொடர்ந்து அவனிடம் தாங்கள் இறுத்த பணம் அறவிட உரித்தாளிகளாவார்கள். இரண்டுபேர் ஒன்று கூட்டாக ஒருவனிடம் பணம் வாங்கி கடனுக்குத்தாங்கள் இருபேரும் பொதுவாகவும் சரிசமனாகவும் கடன்காரனுக்கு உறுதி எழுதிக்கொடுத்தார்களேயானால், அந்தக்கடன் கொடுத்தவன் தன்னுடைய பணம வாங்கவேணும் என்கிற காலத்தில் மறுபடி இவர்கள் இரண்டுபேரையுந் தேடி அழைக்கிறதற்குக் கடனாளிகளாயிராதபடிக்கு அந்த நறுக்கில் அல்லது உறுதியிலே "முன்னின்றார் முன்னிறுக்கக் கடவராகவும்" என்ற வாசகம் வைத்து எழுதுவிப்பார்கள். அந்தப்படி இந்த இரண்டுபேரில் எவன் முன்னே வருவானோ அவனிடத்திலே அந்த முழுத்தொகையுங் கேட்கலாம். முன்னின்றார் முன்னுறுக்கவேண்டுமென்பதினால் முதல் எதிர்ப்பட்ட கடன்காரனே கடன் முற்றும் இறுத்துத் தீர்க்கவேண்டும். ஆகிலும் இப்படி எதிர்ப்பட்டு முழுதும் இறுக்கிறவன் மற்றப்பங்காளனைக் கண்டவிடத்திலே தான் இறுத்த பணத்தொகையின் அரைவாசியை அறவிட்டுக்கொள்ள உரித்தாளியாவான். (தொடரும்)

## மக்கள் சுதந்திர முன்னணியின் நிறைவேற்றுக் குழு கூடியது

(கொழும்பு)

பொதுத் தேர்தலில் மேற்கொள்ளப்படவேண்டிய நட்வடிக்கைகள் மற்றும் திட்டங்கள், பிரசாரங்கள் என்பன குறித்து ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நிறைவேற்றுக் குழுவின் ஆரம்பக் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றுள்ளது.

நேற்று முன்தினம் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமையில் இக் கலந்துரையாடல் நடைபெற்றது.

இக் கலந்துரையாடலில் நந்தன குணதிலக நிறைவேற்றுக் குழுவின் தவிசாளரகாவும் சுசில் பிரேம ஜயந்த பொதுச் செயலாளராகவும் நியமிக்கப்பட்டுள்ளதுடன், தேசிய ஏற்பாட்டாளராக மகிந்த ராஜபக்ஷவும் ஜனாதிபதியின் ஆலோசகர் அனுரா பண்டாரநாயக்கவும் துணைத் தவிசாளர்களாக விஜிதஹேரத், தினேஸ் குணவர்த்தன, நிமால்சிறிபால டி சில்வா, சரத் அமுனுகம, பேரியல் அஸ்ரப் ஆகியோரும் பொருளாளராக பேர்பு பிறேமலால் திஸநாயக்கவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன், உதவிச் செயலாளர்களாக ஜானக பண்டார தென்னக்கோன், றெஜினோட்சுரே, நில்ரோஸ் பெனாண்டோ, அப்துல் மஜீத் விமல்ரட்ணாயக்கா ஆகியோரும் நியமிக்கப்பட்டுள்ளனர்.(தி-60,4)

## விவசாயப் பயிற்சி நிலையத்தால் புதிய சோளம் இனம் அறிமுகம்

(இணுவில்)

புதிய சோளம் இனம் ஒன்று அறிமுகப்படுத்தும் நிகழ்வு அண்மையில் திருநெல்வேலியிலுள்ள மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையத்தில் இடம்பெற்றது.

இந் நிகழ்வில் கமநல கேந்திர நிலைய உத்தியோகத்தர்கள், உலக உணவு ஸ்தாபனப் பிரதிநிகள் மற்றும் விவசாயிகள் சம்மேளன உறுப்பினாகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

உடுவில் விவசாயப் பணிப்பாளர் செல்வராசா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், உடுவில் விவசாயிகள் சம்மேளனத்தின் சமாசத் தலைவர் எஸ்.திருக்குமார் உரையாற்றுகையில்,

யாழ.மாவட்டத்தில் தற்போது பழவகைகள் அதிகமாக உற்பத்தி செய்யப்படுகின்றன. இதனால், அவை முழுவதையும சந்தைப்படுத்த முடியாத நிலை உள்ளதுடன், அவை வீணாகிப் போகும் நிலையும் இருந்து வருகிறது.

எனவே, இங்கு அதிகளவில் உற்பத்தி செய்யப்படும் தக்காளி மற்றும் வாழைப்பழம் போன்றவற்றை நிதானமான ஓர் விலையில் விவசாயத் திணைக்களம் கொள்வனவு செய்து, அவறறைப் பதப்படுத்தி ஜாம், யூஸ் மற்றும் பழரசம் போன்ற பல்வேறு மீள் உற்பத்தி வடிவங்களில் தயாரித்து விவசாயிகளுக்கு உதவிசெய்ய வேணடும் எனக் குறிப்பிட்டார். (தி-122)

## ஆசிய அபிவிருத்தி வங்கி உதவிக்கு பங்கம் இல்லை

### வீதி அபிவிருத்தி பொறியியலாளர் தெரிவிப்பு

(மருதங்கேணி)

எந்தக்கட்சி பதவிக்கு வந்தாலும், வடக்கு - கிழக்கு அபிவிருத்திக்கு வழங்கப்படும் உதவிகளில் எந்தவித மாற்றங்களும் இருக்காது என ஆசிய அபிவிருத்தியின் வீதி அபிவிருத்தி பொறியியலாளர் மோகன்ராஜ் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், தேர்தல் ஒன்று இடம்பெறுவதாலோ அன்றி அந்தத் தேர்தலுக்குப் பின் ஆட்சிமாறுவதாலோ அபிவிருததி நடவடிக்கையில் எந்தப் பாதிப்பும் ஏற்படப்போவதில்லை.

வவுனியா அரசாங்க அதிபர் காரியாலயத்தில் அண்மையில் நடைபெற்ற கலந்துரையாடலில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

450 கோடி ரூபா உதவித் திட்டத்தின் கீழ் வடக்கு-கிழக்கு பகுதிகளில இடம்பெறவுள்ள வீதி அபிவிருத்திப் பணிகள் அடுத்தமாதம் ஆரம்பிக்கப்படவுள்ளது. இத்திட்டத்தின் கீழ் இப்பிரதேசத்தைச் சேர்ந்த 500 கி.மீற்றர் நீளமான பாதைகள் புனரமைக்கப்படவுள்ளன.

இதேவேளை, ஏ-9 பாதையின் புனரமைப்பு பணிகள் 86 சதவீதம பூர்த்தியடைந்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (தி-35)

### பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில்

## இறைச்சிக்காக பசு மாடுகளை வெட்டுவது முற்றாகத் தடை

(மருதங்கேணி)

பசு மாடுகளை இறைச்சிக்காக வெடடுவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படுமென பச்சிலைப்பள்ளி பிரதேசசபை அறிவித்துள்ளது.

பச்சிலைப்பள்ளி பிரதேச சபைக்குடபட்ட இறைச்சிக் கடைகளில் பசு மாடுகளை இறைச்சிக்காக வெட்டபபடுவது கண்டுபிக்கப்பட்டுள்ளது.

கடந்த 15 ஆம் திகதி முதல் இதனை மீறிச்செயற்படுவோர் மீது கடை உரிமை இரத்துச் செய்யப்படுவதுடன், குறித்த நபா மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென பிரதேசபைச் செயலாளர் அறிவித்துள்ளார். (தி-35)

## குளங்கள் கையளிப்பு

(மருதங்கேணி)

முல்லைத்தீவு மாவட்டத்தில் நியாப் திட்டத்தின் கீழ் புனரமைப்புச் செய்யப்பட்ட 4 குளங்கள் அண்மையில் கமக்கார அமைப்புகளிடம் கையளிக்கப்பட்டன.

கூழாமுறிப்பு குளம், காஞ்சூரமோட்டைக்குளம் மருதமடு, இடைக்காட்டுக்குளம் ஆகிய குளங்களே முல்லை மாவட்ட கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளரால் கமக்கார அமைப்புகளிடம் கையளிக்கப்பட்டன. (தி-35)

## இன்று ஒரு தகவல்

# எங்கே நிம்மதி?

“என்ன சார் தேடிக்கொண்டிருக்கின்றீர்கள்?'' என்று கேட்டேன் ஒருவரை. “நிம்மதி எங்கே இருக்கின்றது?'' என்று தேடிக்கொண்டிருக்கின்றேன்! என்றார். “என்னுடன் வாருங்கள் அது இருக்கும் இடம் எது என்று நான் கூறுகிறேன்'' என்று கூறி கூட்டிக்கொண்டு வந்து அமரவைத்தேன், ஒரு கதையையும் கூற ஆரம்பித்தேன்.

ஒரு ஊரில் ஒரு ராஜா இருந்தார். ஒரு ராஜா தனது நாட்டிற்காகச் செய்யவேண்டிய கடமைகளையெல்லாம் ஒழுங்காகத்தான் செய்தார். இருந்தாலும் அவருக்கு நிம்மதி இலலை. எப்போது பார்த்தாலும் ஏதாவது ஒரு பிரச்சினை. அரசனுக்கு அலுத்துவிட்டது. என்ன செய்வது என்று யோசித்தார்.

“பக்கத்தில் உள்ள காட்டில் ஒரு பெரியவர் உள்ளார். அவரிடம் சென்றால் ஏதாவது வழி கிடைக்கும்'' என்று கூறினார்கள். உடனே புறப்பட்டு அங்கே சென்றார். அவரின் காலில் விழுந்தார். “ஐயா... அரசை நிர்வகிக்க எனக்கு மிகவும் கஷ்டமாக இருக்கிறது'' என்றார். “அப்படியென்றால் அதை விட்டுவிடு'' என்றார் பெரியவர். “நான் விலகிவிட்டால் அதன்பின் அரச காரியங்களை யார் கவனிப்பது?'' என்றார் மன்னர். “உன் பிள்ளையிடம் அந்தப் பொறுப்பை ஒப்படைத்துவிடு'' என்றார். “ஒப்படைத்துவிட்டு நான் என்ன செய்வது?'' என்றார். “காட்டுக்கு வந்து என்னுடன் உட்கார்ந்து விடு'' என்றார் பெரியவர்.

அதன் பிறகும் அந்த ராஜா யோசித்தார். “என்ன யோசனை?'' என்று கேட்டார் பெரியவர். அது வந்து... ஒன்றுமில்லை. என்மகன் சிறிய பையன். என்னாலேயே தாங்க முடியாத அரச பாரத்தை அவன் எப்படித் தாங்குவான்? என்று யோசிக்கின்றேன்!'' என்றார். “அப்படியென்றால் அதை என்னிடம் கொடுத்துவிடு'' என்றார் பெரியவர். சரி என்று ஒத்துக்கொண்டார் ராஜா. “சத்தியம் செய்துதா'' என்று கேட்டார் பெரியவர். இவரும் அப்படியே செய்தார். “இனிமேல இந்த இராஜ்ஜியம் முழுவதும் உங்களுக்கு'' என்று சத்தியம் செய்து கொடுத்தார்.

“சரி! இராஜ்ஜியத்தை என்னிடம் கொடுத்து விட்டாய். இனி நீ என்ன செய்யப் போகின்றாய்?'' என்றார். “அரண்மனைக் கருவூலத்திலிருந்து கொஞ்சம் பொன் எடுத்துக் கொண்டு வெளிதேசத்திற்குச் செல்கின்றேன். அங்கு செனறு ஏதாவது வியாபாரம் செய்து பிழைத்துக் கொள்கின்றேன்'' என்றார் ராஜா.

“அரண்மனைக் கருவூலம் இப்போது எனக்குச் சொந்தம் அதிலிருந்து எப்படி பொன்னோ பொருளோ பணமோ எடுக்க முடியும்?'' என்றார் பெரியவர்.“நீங்கள் கூறுவதும் சரிதான். அப்படியென்றால் நான் வேறு எங்காவது போய் ஏதாவது வேலை செய்து பிழைத்துக் கொள்கிறேன்'' என்றார் ராஜா.

“சரி. வேலை செயவதென்று முடிவு செய்து விட்டாய அதை ஏன் வேறு எங்காவது போய் செய்யவேண்டும் இங்கேயே செய்யலாமே! என்றார பெரியவர். ராஜாவும் “அப்படியே செய்கிறேன். ஏதாவது வேலை கொடுங்கள்'' என்றார். பெரியவர் வேலை கொடுத்தார். ராஜாவைப் பார்ததுச் சொன்னார். “இதோ பாரப்பா நீ ஏற்கனவே ராஜாவாக இருந்து பழக்கப்பட்டவன். அதனால் எனக்குப் பதிலாக நீ இந்த இராஜ்ஜியத்தை கவனித்துக் கொள் உனது வேலைக்கு உனக்குச் சம்பளம் உண்டு.

கடமையைச் செய்யவேண்டியது உன் பொறுப்பு. அதில் உள்ள நன்மை தீமைக்கு நான் பொறுப்பு. நீ உன் வேலையைச் செய்துவிட்டு மாதாமாதம் என்னிடம் வந்து சம்பளத்தை வாங்கிக் கொள்'' என்றார்.

அப்படியே செய்தார் அந்த ராஜா. முன்பு என்ன செய்து கொண்டிருந்தாரோ அதைத்தான் இப்போதும் செய்கிறார். ஆனால் இப்போது கவலையில்லாமல் நிம்மதியாக இருந்தார். பிரச்சினைகள் பெரிதாகத் தெரியவில்லை. நிம்மதியாகத் தூங்க முடிந்தது.

எனது கடமையை நான் செய்கின்றேன் இந்த அரசாங்கம் எனதல்ல என்ற நினைப்புத்தான் அந்த நிம்மதிக்குக் காரணம். ஒரு மாதம் கழித்து அந்தப் பெரியவர் ராஜாவைச் சந்தித்து “புதிய வேலை எப்படியுள்ளது?'' என்று கேட்டார். “நிறைவாக இருக்கின்றது நிம்மதியாக இருக்கின்றது'' என்றார் ராஜா. “அரசாங்கம் உனது என்று நினைத்தபோது அவதி. அது உனது அல்ல என்று தெரிந்ததும் நிம்மதி. பற்றில்லாமல் கடமையைச் செய் பலனை எதிர்பார்க்காதே இது தான் நிம்மதிக்குவழி. இதை நீ புரிந்துகொள்ள வேண்டும் என்பதற்குத்தான் இப்படிச் செய்தேன்'' என்றார் பெரியவர். நாமும் அதைப்புரிந்துகொண்டால் நன்றாக வாழலாம். புரிந்து கொள்ள வேண்டுமே!

ஒரு ராஜா இருந்தார். ஒரு வெளி தேசத்து வியாபாரி ஒரு விலை உயாந்த குதிரையை அவருக்கு அன்பளிப்பாகக் கொடுக்க வந்தார். ராஜா கோபமாகப் பேசினார். “நான் இலவசமாக யாரிடம் எதுவும் வாங்குவதில்லை. அது ஊழலுக்கு வழிகோலும் அது தெரியுமா உனக்கு?'' என்று பேசினார்.

“மன்னிக்க வேண்டும மகாராஜா உங்கள் நேர்மையை நன்கு புரிநது கொண்டேன். அதனால் இந்தக் குதிரையை நீங்கள் இலவசமாக ஏற்றுக் கொள்ள வேண்டாம் விலைக்கு வாங்கிக் கொள்ளுங்கள். ஒரு ரூபாவிலைக்கு நான் விற்கின்றேன்'' என்றான் வியாபாரி. ராஜா யோசித்தார் “அப்படியென்றால் இந்தா 10 ரூபா குதிரையை என்னிடம் கொடு'' என்றார்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# குடாநாட்டை நேரில் பார்வையிட்டார் இந்திய இராஜ்ஜிய சபை உறுப்பினர்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டு நிலைமைகளை நேரில் பார்வையிடுவதற்காகத் தனிப்பட்ட விஜயம் ஒன்றை மேற்கொண்டு இந்திய இராஜ்ஜிய சபையின் முன்னாள் உறுப்பினர் எடியூ ஆர்டோ ஃபலிறோ நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்திருந்தார்.

யாழ். வந்த அவர் நேற்றுமுன்தினம் காலை யாழ். செயலகத்தில், யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் செ. பத்தமநாதன் மற்றும் மேலதிக அர சாங்க அதிபர் திருமதி பத்தினியம்மா திலகநாயகம் போல் ஆகியோரைச் சந்தித்து யாழ். குடாநாட்டின் தற்போதைய நிலைமைகள் தொடர்பாக விரிவாகக் கேட்டறிந்தார்.

இசசந்திப்பின் பின்னர் அங்கு இடம்பெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில், எடியூஆர்டோ ஃபலிறோ கருத்து வெளியிடுகையில்,

இலங்கையில் நிரந்தர சமாதானம் ஒன்றை ஏற்படுத்துவதற்கு வேண்டிய அனைத்து முயற்சிகளுக்கும இந்தியா எப்போதும் ஆதரவு வழங்கும். நிரந்தர சமாதானம் ஒன்றை உருவாக்குவது பேச்சுவார்ததைகளின் மூலமே சாத்தியமாகும். எனவே இங்கு சமாதானப் பேச்சுவார்த்தைகள் தொடர்ந்தும முன்னெடுப்பதற்குரிய முயற்சிகள் விரைவில் மேற்கொள்ளப்பட வேண்டும்.

இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடையிலான வர்ததக உறவுகள் மிகவும் பயனுடையவையாகவே உள்ளன. இவற்றை மேலும் பலப்படுத்தி பிராந்திய ஒருமைப்பாட்டுடன் தொடர்ந்தும் மேற்கொளவதற்குப் பயனுள்ள பல நடவடிக்கைகள் முன்னெடுககப்படவேண்டும்.

அத்துடன்,தெற்காசியப் பிராந்தியத்திலேயே இலங்கையின் கல்வித்தரம் மிக உயர்வடைந்துள்ளதாக அறிந்துள்ளேன். அந்த வகையில் ஏனைய பிரதேசங்களைவிட யாழ். குடாநாட்டின் கல்வி நிலை மிகவும் மேம்பட்ட ஓர் நிலையிலேயே காணப்படுகிறது எனக் குறிப்பிட்டார்.

கடந்த காலத்தில் இடம்பெற்ற யுத்த நடவடிக்கைகளால் அழிவடைந்துள்ள யாழ். குடா நாட்டுவளங்கள் பற்றியும் இன்னும் பல விடயங்கள் குறித்தும் இவர் அரச அதிபரிடம் கேட்டறிந்தார்.

முன்னர் இவர் கொழும்பு, கண்டி மற்றும் நுவரெலியா போன்ற இடங்களுக்குச் சென்று நிலைமைகளை அவதானித்ததுடன், யாழ்ப்பாணத்திற்கான இவரது முதலாவது விஜயம் இதுவென்பதும் குறிப்பிடத்தக்கது. (தி-16)

# இன்பருட்டி மீனவர்களை படையினர் தாக்கவில்லை

## யாழ். படைத் தலைமையகம் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை இன்பருட்டி கடற்பரப்பில் வைத்து கடந்த 12ஆம்திகதி இந்திய மீனவர்களை கரைக்குப் பிடித்துக்கொண்டுவந்த இன்பருட்டிப் பகுதி மீனவர்களை படையினர் தாக்கியதாக இணையத்தளம் ஒன்று வெளியிட்ட செய்தி தொடர்பாக யாழ். பாதுகாப்பு நடவடிக்கை தலைமையகத்தைச் சேர்ந்த கப்டன் ஏ.விஜேசிங்க செய்திக்குறிப்பொன்றை அனுப்பி வைத்துள்ளார்.

அதன் விபரம் வருமாறு,

கடந்த நாட்களுக்குமுன் பருத்தித்துறை இனபருட்டி கடற்பகுதியில் வைத்து இந்திய மீனவர்களை மடக்கிப்பிடித்த இலங்கை மீனவர்களை இராணுவத்தினர் தாக்கியுள்ளார்கள் என்று கடந்த 12ஆம் திகதி இணையத்தளம் ஊடாக தகவல் வெளியிடப்பட்டுள்ளது. இது குறித்து நாம் மேற்கொண்ட விசாரணைகளில் இருந்து பின்வரும் விபரங்கள் வெளியாகியுள்ளது. அவை வருமாறு,

524 படையணிக்குட்பட்ட சக்கோட்டை மற்றும் இன்பருட்டி, வியாபாரிமூலை போன்ற கிராமத்தில் வசிக்கும் மீனவர்கள் ஒன்றிணைந்து இந்திய மீனவர் கள 27 பேரையும் அவர்களது 3 படகுகள் 2, வள்ளங்கள் என்பவற்றையும் பலவந்தமாக கரைக்குக் கொண்டுவந்துள்ளனர். இவ்வாறு கரைக்குப் பிடித்துவரப்பட்ட இந்திய மீனவர்கள் அனைவரையும் கரையோரப் பாதுகாப்பில் இருந்த இராணுவத்தினரும் பொலிஸாரும் இணைந்து இந்திய மீனவாகளை பாதுகாப்பாக பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்தார்கள்.

அதற்குப் பின்னர் இந்திய மீனவர்களின் படகுகளையும் வள்ளங்களையும் மீன்பிடி வலைகள் உட்பட ஏனைய பொருட்களையும்பொறுப்பேற்ற பொலிஸார் இலங்கை மீனவர்களை அவர்களது வீட்டுக்குச் செல்ல அனுமதித்தார்கள். இந்திய மீனவர் களையும் அவர்களது உடைமைகளையும் பொறுப்பேற்ற பொலிஸார் அவர்களது 3 படகுகள் 2 வள்ளங்கள் ஆகியவற்றையும் படகின் வள்ளங்களின் உரிமையாளர்கள் மற்றும் அவற்றைச் செலுத்தி வந்தவர்களையும் 16ஆம் திகதி வரை தடுத்து வைத்திருக்கும்படியும் ஏனைய 20 மீனவர்களையும் இலங்கை கடற்படையினரினூடாக இந்திய கடற்படையினரிடம் ஒப்படைப்பதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டிருந்ததுடன், இந்த மீனவர்களை கடற்படையினரிடம் கையளிப்பதற்காக பருத்தித்துறை பொலிஸ நிலையத்தில் தங்க வைத்துள்ளார்கள்.

இந்த சம்பவத்தின் போது இந்திய மீனவர்களை மடக்கிப்பிடித்து கரைக்கு அழைத்து வந்த இலங்கை மீனவர்கள் வீட்டிற்குச் செல்வதற்கு முன்பதாக, இராணுவத்தினரால் எவ்வித தாக்குதலுக்கோ அச்சுறுத்தலுக்கோ உள்ளாகவில்லை என இன்பருட்டி மீனவர் சங்கத்தின் முன்னைய நாள் தலைவர் எஸ். விசுவலிங்கமும் ஏனைய மீனவர்களும் தெரிவித்துள்ளார்கள்.

ஆனால்,கடந்த 12ஆம்திகதி இணையத்தளம் மூலமாக பிரசுரமான செய்தி தொடர்பாக விசாரணை செய்தபோது, இந்தச்செய்தி உண்மைக்குப் புறம்பானவை என்பதுடன், குறித்த இணையத்தளம் ஊடாக பொய்ப் பிரசாரம் மேற்கொண்டு மக்களைத் தவறான பாதையில் அழைத்துச் செல்ல முயற்சிப்பதாகவும் இந்தச் செய்தியில் எதுவித உணமையும் இல்லை என்றும் வெளிவந்துள்ளது என அச்செய்திக்குறிப்பில் தெரிவிக்கபபட்டுள்ளது. (ந)

## இராசி பலன்

19. 02. 2004

(மாசி 07, வியாழக்கிழமை)

| | |
|---|---|
| சதுர்த்தசி | பிற்பகல் 4.51 மணிவரை |
| திருவோணம் | பிற்பகல் 3.16 மணிவரை |
| இராகுகாலம் | 2.02-3.32 மணிவரை |
| சுபநேரம் | 8.02-9.32 மணிவரை |

*போதாயன அமாவாசை*

**மேடம்**
தொழலில் ஆர்வம், அதிகாரம், எடுத்த காரியம் கைகூடும், பெரியோர் உதவி.

**இடபம்**
புதிய திட்டமிடல், காரிய தாமதம், பிதாசிந்தை, சிந்தனை மிகுதி.

**மிதுனம**
அமைதிக் குறைவு, முயற்சி தாமதம், திருடர் பயம், பணத்தட்டுப்பாடு.

**கடகம்**
சென்ற இடத்தில் செல்வாக்கு, குடும்ப நலம், பொருள் சேர்க்கை, உடல் நலம்.

**சிங்கம**
அறிஞர்கள் சந்திப்பு, மனமகிழ்ச்சி, எடுத்த காரியம் கைகூடும், ஆரோக்கியம்.

**கன்னி**
மனப் பதற்றம், காரிய சிந்தை, சொத்துக்களால் கவலை, உடல் நலக்குறைவு

**துலாம்**
மனச் சஞ்சலம், முயற்சி தாமதம், ரோக நிலை, எதிர்பாராத நன்மை.

**விருச்சிகம்**
நல்ல காரியம், உறவினர் சந்திப்பு, புதிய பொருள் சேர்க்கை, பிரயாணம்.

**தனுசு**
அதிக யோசனை, காரிய தாமதம், தொழிலில் ஆர்வம், தனவிரயம்.

**மகரம்**
புதிய யோசனை, முயற்சி கைகூடும், போசனசுகம், உறவினர் சந்திப்பு.

**கும்பம்**
காரிய அலைச்சல், நண்பர்கள் மனஸ் தாபம், பொருள் விரயம், அமைதிக் குறைவு.

**மீனம்**
தொழில் சிந்தை, குடும்ப மகிழ்ச்சி, காரிய சித்தி, நல்ல வருமானம்.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)
- வளவன்.

## கிராம அலுவலர் நியமனம்

(நவாலி)

உயரப்புலம் ஜே/132 கிராம அலுவலராக எஸ். ஸ்ரீஸ்கந்தராஜா அண்மையில் வலிகாமம் தென் மேற்குப் பிரதேச சபையினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

முன்னர் மேற்படி பகுதிக்கு கிராம அலுவலராக இருந்த பா. சிவபாதசுந்தரம் ஓய்வு பெற்றுச் சென்றதை அடுத்தே, தற்போது இவர் நியமனம் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.(தி-102)

# நுண்கலைப் பீடத்திற்கு தெரிவாகியோர் விபரம்

(இணுவில்)

2003/2004 ஆம் கல்வி ஆண்டில் யாழ். பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைப் பீடத்திற்கு நடனம், சங்கீதம், சித்திரமும் வடிவமைப்பும் ஆகிய பாடங்களுக்குத் தெரிவு செய்யப்பட்டவர்களின் பெயர் விபரங்கள் வெளியாகியுள்ளன.

இக கற்கை நெறிக்கு தெரிவாகியுள்ளோரில் சங்கீத பாடத்துக்கு தெரிவாகியோர் இன்று வியாழக்கிமையும், நடன பாடத்துக்குதெரிவாகியோர் நாளை வெள்ளிககிழமையும தங்கள் பதிவுகளை மேற்கொள்ளுமாறு யாழ். பல்கலைக்கழகப் பதிவாளர் கேட்டுள்ளார்.

அவர்களின் விபரம் பின்வருமாறு,

### சங்கீதம்

ரி.ஆன தர்ஷிகா பீரிஸ், ச.அனுஷா, அ.அருளினி, இ.அருள்மலர், ந.பகீரதி, ந.பாமினி, கோபானுரேகா, ர.தாரணி, இ.ரஜி, இ.சங்கீதா, சு.சுவராஜினி, சொ.சோபனா, ச.சுபானி, சி.சுபிதா, சி.சுஜிர்தா, பா.சுஜீததா.

கு.சுஜிதா, மா.சுகிதா, வ.சசீவா, சி.சுதாஷினி, சி.தஜீவனா, த.தர்மினி, க.தவச்செல்வி, ந.தேவப்பிரியா, பா.உஷாந்தி, வி.உதயகிரி, கு.வாஜனி, சு.வீணலிங்கீதா, கு.வேதப்பிரியா, ப.விஜயலலிதா, இ.விஜிதா, பா.விதுபா, சி.துஷ்யந்தி.

### நடனம்

த.அபிராமி, ச.அகிலா, த.அனுஷா, மா.அபிராமி, இ.அருள்வதனா, பே.பேபிசர்மிளா, ப.பிருந்தா, இ. துர்க்கா, வ.இனபநிதி, ஜோ.யசிந்தா, ர.ஜயஸ்மினி, தே.கார்த்திகா, தெ.கயல்விழி.

வ.கிருஷ்ணவேல், இ.லஜிதா, த.லக்ஷா. ம.மனோபிரியா, அ.மனோஜக்குலீன், ச.மேனகா, செ.மித்திரநாதன், ம.நாகரஜனி, கு.நிர்மலா, ச.நிவேதிதா, வி.நிவேதிதா, அ.பிரதீபா, அ.பிரதீபா, பா.பிரதீபா, தி.பிரதிபா.

கி.பிரமலதா, ச.புஷ்பகுமாரி, எ.றெமிசியா சாந்தகுமாரி, இ.றேனுகா, வ.ரிசாந்தினி, ச.ரூபிகா, சு.சபேசன், ந.பிரகாந்தி, தி.பிரதீபா, க.ரஜீவன், தி.ரஜீவி, த.தேனுஸா, க.ரேவதி, செ.றோகனா, வா.சங்கீதா, து.சந்தியா, சி.சரண்ஜா.

து.சரஸ்வதி, த.சாளினி, தி.சர்மிளா, பா.சியாமினி, வி.சிவமதி, வே.சிவராசா, சி.சிவரூபி, ம.சுபநந்தினி, சி.சுகந்தன், கு.சுபோதினி, க.சுலஷ்சினி, வே.தாட்சாயினி.

த.தக்ஷாயனி, ச.தக்ஷாயினி, ந.தனசொரூபி, வ.தேனுகா, இ.திருநிறைச்செல்வி, த.ஜீவனி, அ.ஊர்மிளா, க.வதனரூபி, சு.விஜிதா, வி.விஜிதா, கி.துஷியாந்தி, சு.கருணாகரன், த.கணேசவேல்,

க.காயத்திரி, அ.காயததிரி, பா.கெங்கா, உ.கோகிலரதி, கீ.கிறேசி கௌரி, செ.ஜாலினி, ந.ஜெகதீஸ்வரி, அ.யேசுமேரி, ந.ஜெயமலர், வி.கலைமதி, மா.கமலகலாரத்தினம், கை.கவிப்பிரியா.

வி.கவிதா, மா.கேமபிரியா, சு.கிரிஜா, வ.கோகிலாவாணி, பி.கோமள மேரி, இ.மலர்விழி, சூ.மேரிஜெசிமா, வ.மதுமிதா, ஜெ.மேனகா, இ.மோனதாரணி, தி.மைதிலி, அ.நந்தபவம், வி.நிரஞ்சினி, ப.நிருமா, ச.நிருஜா, ந.நித்தியலஷ்க்மி, ப.நிவேதிதா, இ.நொய்லின் நிலானி, அ.பவானி.

### சித்திரமும் வடிவமைப்பும்

ம.சனந்நிருஷா, வே.பவசயந்தன், இ.சர்மிளா, அ.டனிலா அஜநதி, ப.ஜெயபாலன் தேதஜேநதிரன், அ.கெமிலஸ் பெல்சன், கோ.கோகிலன், ம.லாவன்ஜன், ச.மதுமிதா, கோ.நவராஜா, த.நிஷியந்தி, க.பாக்கியராஜ்.

வே.புனிதராஜா, இ.ராயேஸ்வரன, து.ரதீபன், செ.ரேகன், பி.ரொனடிமல், பா.சன்சுதா, மா.சசிகலா, ம.சிவதர்ஷினி, சி.சிறிவெங்கடேஷ், வ.தாயகன், வை.தர்ஷன், வை.திலீபன், சி.தினேஷ்குமார், வே.வேலவன்.

(தி-122,19).

# உலகளாவிய ரீதியில் புகைப்படப் போட்டி

(யாழ்பபாணம்)

லண்டனைத் தலைமையகமாகக் கொண்டு இயங்கும் WACC என்ற அமைப்பு உலகளாவிய ரீதியில் "Images of communication"எனும் தலைப்பிலான புகைப்படப் போட்டியொன்றை நடாத்தவுள்ளது.

"தொடர்பாடல்" எனும் கருவில் நடாத்தப்படும் இப்புகைப்படப் போட்டிக்கு, ஒருவர் எத்தனை புகைப்படங்களை வேண்டுமானாலும் அனுப்பி வைக்கலாம். யாழ்ப்பாணத்திலுள்ள பத்திரிகையாளர்களும் தமது புகைப்பட ஆக்கங்களை இன்ரநெற் வழியாக இலகுவாக அனுப்பிவைக்கலாம.

இப் போட்டியில் உலகளாவிய ரீதியில் முதற்பரிசு பெறுவோருக்கு 750 அமெரிக்கடொலா வழங்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விபரஙகளைப் பெறுவதற்கு யாழ். பல்கலைக்கழகத்தில் இயங்கும் ஊடகவளங்கள் மற்றும பயிற்சி நிலையத்தில அலுவலக நேரத்தில் நிலைய ஆலோசகர் கலாநிதி அருட்செல்வத்துடன் தொடர்புகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (தி-18)





சிறைச்சாலையில் உண்ணாவிரதமிருந்துவரும் இந்திய மீனவர்கள் மயக்கமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (படங்கள்:ஐங்கரன்)

# வடக்கு-கிழக்குப் பகுதிகளுக்கு தொடர்ந்தும் நிதியுதவி

## வாஷிங்டன் கூட்டத்தில் முடிவு

(வாஷிங்டன்)

இலங்கைக்கு உதவி வழங்கும் மாநாட்டிற்கு கூட்டுத் தலைமை வகித்த நாடுகளின் மீளாய்வுக் கூட்டம் நேற்றுமுன் தினம் வாஷிங்டனில நடைபெற் றது.

அமெரிக்க வெளிவிவகார அமைச்சின் செயலகத்தில பிரதி வெளிவிவகார அமைச்சர் றிச்சட் ஆர்மிடேஜ் தலைமையில் இக் கூட்டம் இடம்பெற்றது.

இதில் ஐரோப்பிய ஆணைக் குழுவின் சார்பில் அதன வெளியுறவுகளுக்கான பிரதிப் பணிப்பாளர்களான சேய்கியூங், மலன் மாக்கீசன் ஆகியோரும் ஐரோப்பிய ஒன்றியத்தின் சார்பில் அமெரிக்காவுக்கான அயர்லாந்துத் தூதுவர் றைடிஸபகயிர் மற்றும் உதவியாளரான கதரினா நைடில் ஆகியோரும் ஜப்பானிய விசேட தூதுக் குழுவன் சார்பில் விசேட தூதுவர் யசூசி அகாஷி அதன் தென்மேற்கு ஆசியப் பிராந்தியத்திற்குப் பொறுப்பானவரும் இலங்கைக்கான விசேட பிரதிநிதியுமான யுற்றாசா சிறறுக்கா, ஜப்பானிய வெளிவிவகார அமைச்சின் பிரதிநிதி ரஜ்ஜி புஜீடா ஆகியோரும் நோர்வேத் தரப்பில் நோர்வேயின் சமாதானத் தூதுவர் எரிக்சொல் ஹெய்ம், பிரதிவெளிவிவகார அமைச்சர் விடார் ஹெல்கீசன், இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பீற்றசன் ஆகியோரும்,

அமெரிக்கத் தூதுக்குழுவின் சார்பில் தெற்காசிய விவகாரங்களுககான உதவி வெளிவிவகார அமைச்சர் கிறிஸ்ரினா றொக்கா இவரின விசேட உதவியாளர் காஸ்ஸ் றைட், இலங்கை விடயங்களுக்கான பொறுபபதிகாரி ஜேம்ஸ் கோணர் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இக் கூட்டத்தில் எதிர்வரும் ஏப்ரல மாதம் நடைபெறவுள்ள பொதுத்தேர்தல நீதியையும் சமாதானத்தையும் இலங்கையில் நிலைநிறுத்த வழிவகுக்க வேண்டும்.

அரசியல் இழுபறிகளால் இடைநிறுத்தப்பட்டுள்ள சமாதானப் பேச்சுவார்த்தைகள் மீண்டும் ஆரம்பிக்கப்படவேண்டும் என நோர்வே, ஜப்பான்,அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஆணைக் குழுவின் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.

அவ்வாறு சமாதானப்பேச்சுவார்த்தைகள் மீண்டும் ஆரம்பிக்கும் பட்சத்திலேயே இலங்கைக்கான உதவிகளை தாம் முழுமையாக வழங்க முடியும்.

வடக்கு-கிழக்குமாகாணத்தில் வாழும் மக்களுக்கு வழங்கப்பட்டுவரும் மனிதாபிமான உதவிகள் நிறுத்தப்பட மாட்டாது. அவை தொடர்ந்தும் வழங்கப்படும் எனவும் கூறினார்கள்.

(தி-60,10)

# மரக்கறி உட்கொண்டால் புற்றுநோய் வராது

## அமெ.விஞ்ஞானிகள் தகவல்

(கொழும்பு)

மரக்கறி உணவு வகைகளை அதிகமாகஉட்கொள்வோர்களுக்கு கொலஸ்ரோல் மற்றும் புற்றுநோய் ஏற்படும் அபாயம் மிகக்குறை வாகவே காணப்படுகிறது என அமெரிக்க விஞ்ஞானிகள் தெரி வித்துள்ளனர்.

கடந்த 17. வருடங்களாகத் தொடர்ந்து இதுபற்றி ஆராய்ச்சி நடத்திவந்த அமெரிக்க விஞ்ஞானிகள் இது தொடர்பாக அறிக்கையொன்றையும் வெளியிட்டுள்ளார்கள்.

மரக்கறி உணவை அதிகமாக உட்கொள்வே ார்களுக்கு "கொலஸ் ரோல்"மற்றும் புற்றுநோய் ஏற்படும் அபாயம் மிகக்குறை வாகவே காணப்படுகின்றது. இதனை தாம் மேற்கொண்ட ஆய்வுகள் உறுதிப்படுத் தியுள்ளதாகவும் அமெரிக்க விஞ்ஞானிகள் வெளியிட்டுள்ள அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (தி-60,10)

# கதிர்காமரின் முரண்பட்ட செயற்பாடுகளுக்கு மேலிடத்து அரசியல் அழுத்தமே காரணம்

## கட்டுப்பாடற்ற ஊடகவியலாளர் அமைப்பு கண்டனம்

(கொழும்பு)

ஜனாதிபதியால் புதிதாக நியமிக்கப்பட்ட தகவல் தொலைத தொடர்பு அமைச்சர் லக்ஷ்மன் கதிாகாமரின் செயற்பாடுகளுக்கு கட்டுப்பாடற்ற ஊடகவியலாளர் அமைப்பான "ஐரோப்பிய ஊடகவியல கண்காணிப்பு அமைப்பு" அதிருப்தியையும் கண்டனத்தையும் வெளியிட்டுள்ளது.

கொழும்பில் புதிதாக ஆரம்பிக்கப்படவிருந்த ஏ.பி.சி நிறுவனத்தின் தனியார் தொலைக் காட்சி சேவையைத் தடை செய்வதாகக் கடந்த திங்கட்கிழமை லக்ஷ்மன் கதிர்காமர் திடீரென அறிவித்திருந்தார்.

இதனையடுத்து, ஏ.பி.சி நிறுவனம் லக்ஷ்மன் கதிர்காமரின் இந்த அறிவிப்புக்கு எதிராக நீதிமனறத்தில் மேல் முறையீடு செய்திருந்தது. இந்நிலையிலேயே லக்ஷ்மன் கதிர்காமரின் இந்த திடீர் நடவடிக்கைகள் குறித்து ஐரோப்பிய ஊடகவியல் கண்காணிப்பு அமைப்பு எழுத்து மூலம தனது கண்டனத்தை வெளியிட்டுள்ளது.

அவ் வமைப்பு வெளியிட்டுள்ள கண்டனக்கடிதத்தில், கந்தவாரம் லக்ஷ்மன் கதிர்காமர் ஜனாதிபதி சந்திரிகாவால் தகவல்தொலைத்தொடர்பு அமைச்சராக நியமிக்கப்பட்டதன் பின்னர் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது அவர் பல்வேறு கருத்துக்களை முன்மொழிந்திருந்தார்.

அந்த வகையில், அனைத்து அரச ஊடகங்களும் நேர்மையாகவும் நியாயமாகவும் செயற்படுவதற்குப் பணிக்கப்படும். தனியார் ஊடகங்கள் அதன் உரிமையாளர்களுக்கே முழுவதும் சொந்தமாகவிருப்பதால் அவர்கள் விரும்பிய விதத்தில் அவற்றைச் செயற்படுத்தலாம் எனத் தெரிவித்திருந்தார்.இது இவ்வாறிருக்கையில், எதுவித காரணங்களுமின்றி ஏ.பி.சி நிறுவனத்தின் தொலைக் காட்சி சேவைமீது தடைவிதிக்கப்பட்டுள்ளது. சுதந்திரமாகச் செயற் படலாம என முன்பு அறிவித் திருந்த லக்ஷமன் கதிர்காமர், ஒரு சில நாட்களுக்குள் இப்படியான எதிர்மாறான முடிவுகளை எடுப்பதற்கு மேலிடத்து அரசியல் அழுத்தங்களே காரணம். எனவே, உடனடியாக இந்தத் தடை உத்தரவை ரத்துச் செய்து ஏ.பி.சி நிறுவனத்தின் தொலைக்காட்சி சேவைக்கு அனுமதி வழங்க வேண்டும் என அககடிததததில் கோரிக்கை விடுககப்பட் டுள்ளது.

(தி-18)

# பொலிஸ்மா அதிபரின் பதவிக்காலம்

## மேலும் 6 மாதம் வரை நீடிப்பு

(கொழும்பு)

பொலிஸ்மா அதிபர் இந்திரா டிசில்வாவின் பதவிக்காலம் நேற்று முன்தினத்தில் இருந்து மேலும் 6 மாதாகாலத்திற்கு நீடிககப்பட்டுள்ளது.

அரசியல் யாப்பின் கீழ் தமக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களின் அடிப்படையிலேயே ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இந்தப் பவிக்கால நீடிப்பை வழங்கியுள்ளார்.

பொலிஸ்மா அகிபரின் பகவிககாலம் நேற்றுடன் முடிவடைகின்றபோதும்,பொதுத்தேர்தல் மற்றும் மாகாண சபைத்தேர்தல் ஆகயவற்றைக் கருத்தில் கொண்டே ஜனாதிபதி இந்தப் பதவி நீடிப்பை வழங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தச் சேவை நீடிப்பின் படி எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 18ஆம்திகதிவரை பொலிஸ்மா அதிபராக இந்திரா டிசில்வா கடமையாற்ற ுமடியம். (கி-60.10)

அவாவினை ஆற்ற அறுப்பின் தவாவினை
தான்வேண்டு மாற்றான் வரும். -குறள்

வலம்புரி

## பிரதமராகும் ஆசையில் பிதற்றுகிறார் கதிர்காமர்

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆட்சி அமைத்ததும் தற்போதைய சமாதான முயற்சிகள் முன்னெடுக்கப்படும் எனக் காபந்து அரசின் தகவல் தொடர்பாடல் அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் கூறியுள்ளார்.

வர்த்தக சமூகத்தினரைச் சந்தித்து கலந்துரையாடியபோதே கதிர்காமர் மேற்கண்டவாறு கூறியிருக்கிறார். பிறப்பால் - பெயரால் தமிழரான கதிர்காமர் தமிழ் மக்களுக்குச் செய்த அநீதிகள் எளிதில் மறப்பதற்குரியவையல்ல.

பொதுஜன ஐக்கிய முன்னணியின் ஆட்சியில் வெளிவிவகார அமைச்சராக இருந்த கதிர்காமர், புலிகளுக்கும், தமிழ் மக்களுக்கும் எதிராகப் பொய்ப் பிரச்சாரங்களை மேற்கொண்டு சர்வதேச ரீதியில் ஓர் தவறான எண்ணப்பாட்டை ஏற்படுத்தியிருந்தார்.

அதன்காரணமாக விடுதலைப் புலிகளை குறிப்பிட்ட சில நாடுகள் தடை செய்திருந்தன. பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சியில் இருந்த போது தமிழ் மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும் எனக் கதிர்காமர் எண்ணியிருந்தால், நிச்சயமாக பிரச்சினைக்கு நிரந்தரத்தீர்வு கண்டிருக்க முடியும்.

ஆனால் அவர் அதற்கு மாறாகத் தமிழ் மக்களின உயிரிழப்பில் எக்காளமிட்டார். ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவுக்கும், சிங்கள மக்களுக்கும் தன்னை விசுவாசியாகக் காட்டிக்கொள்வதில் முனைப்பாக இருந்தாரே தவிர, தமிழ் மக்களின் உள்ளார்ந்த மன உணர்வுகளை - உரிமைகளை மதித்து அவற்றை நிவர்த்தி செய்வதில் அவர் அக்கறை காட்டவில்லை.

இதனால் கதிர்காமர் என்ற பெயர்ப்பதம் தமிழ் மக்களிடையே வேம்பாகக் கைத்தது. சிங்களவர்களின் வாலைப் பிடித்துக்கொண்டு தன்னினத்தைக காட்டிக்கொடுக்கும் ஒருவராகவே அவர் கருதப்பட்டார்.

அத்தகையதொருவர் இப்போது தாம் ஆட்சிக்கு வந்ததும் சமாதானப் பேச்சுக்களை முன்னெடுப்போம் எனக் கூறுவது மிகப் பெரிய நகைச்சுவையாக உள்ளது.

கிடைத்த சந்தர்ப்பம் முழுவதையும் தமிழருக்கு எதிராகப் பயன்படுத்திவிட்டு, இப்போது சுடலை ஞானத்தில் பிதற்றுவது அவரின் கபட நோக்கத்தையே வெளிப்படுத்துகிறது.

அதாவது, விடுதலைப்புலிகளுடன் ஐக்கிய தேசிய முன்னணி அரசு செய்துகொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் தனிநாட்டுக்கு வழிவகுக்கும். அவர்கள் முன்வைத்த இடைக்கால சபைத்திட்டம் தமிழீழத்திற்குச் சமமானது என்றெல்லாம் கூறி வந்த கதிர்காமர் சமாதான முயற்சிகள் தொடரப்படும் எனக் கூறியிருப்பது இலங்கை நாட்டின் முழு மக்கள் குழுமத்தையும் மடைமையாக்குவதாக அமையும்.

ஜே.வி.பியுடன் கூட்டுச் சேர்ந்துகொண்டு சமாதான முயற்சிகளின் ஆணிவேரை அறுத்தெறியும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவும், கதிர்காமரும் இப்போது மட்டும் சமாதானம் பற்றிப் பேசுவது தேர்தல் கால ஜாலம் என்பதை மக்கள் புரிந்துகொள்வர்.

இருபது வருட கால யுத்தத்திற்கு தீர்வு காண்பதற்காக ஐக்கிய தேசிய முன்னணி அரசினால் முன்னெடுக்கப்பட்ட சமாதான முயற்சிகளைக் குலைக்கும் நோக்குடன், அந்த அரசின் கீழ் இருந்த பாதுகாப்பு, உட்துறை, ஊடகத்துறை ஆகிய முக்கிய மூன்று அமைச்சுக்களைப் பறிமுதல் செய்த ஜனாதிபதி ஈற்றில் பாராளுமன்றத்தையே கலைத்துவிட்டார். நாட்டின் பாதுகாப்பிற்கு ஐக்கிய தேசிய முன்னணி அரசால் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாகக் கூறியே பாராளுமன்றம் கலைக்கப்பட்டது.

யுத்தம் நடைபெற்றுக்கொண்டிருந்தபோது, போரினால் மக்கள் மடிந்துகொண்டிருந்த வேளையில், நாட்டின் பாதுகாப்பிற்கு ஏற்படாத அச்சுறுத்தல், யுத்த நிறுத்தம் செய்யப்பட்டு, விடுதலைப் புலிகளோடு புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டு நோர்வேயின் அனுசரணையுடன் சர்வதேசத்தின் கண்காணிப்பில் சமாதான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டபோது ஏற்பட்டதெனக் கூறப்படுவது, எவ்வகையில் பொருத்தமில்லையோ அதேபோன்றுதான் அமைச்சர் கதிர்காமரின் பிதற்றலும் அமைந்துள்ளது.

# இலங்கையின் பொதுத்தேர்தல் சமாதானத்தைப் பாதிக்கக் கூடாது

### ஐரோப்பிய ஒன்றிய வெளிவிவகார ஆணையாளர் தெரிவிப்பு

இலங்கையில் ஏப்ரல் மாதம் 2 ஆம் திகதி நடைபெறவுள்ள பொதுத் தேர்தல் சமாதான நடவடிக்கைகளில் பாதிப்பை ஏற்படுத்தக் கூடாது என ஐரோப்பிய ஒன்றியத்தின் வெளிவிவகார ஆணையாளர் கிறிஸ்பற்றன் வலியுறுத்தியுள்ளார்.

ஆப்கானிஸ்தானின் தலைநகர் காபூலில் தற்பொழுது தங்கியுள்ள இவர், செய்திச் சேவை ஒன்றுக்கு வழங்கிய செவ்வியின் போதே இதனைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

இலங்கையின் அரசியல் நெருக்கடிகளைத் தொடர்ந்து, திடீர் தேர்தல் அறிவிப்புப் பிறப்பிக்கப்பட்டுள்ளது. இதனால் இலங்கையின் சமாதான முயற்சிகள் ஓரங்கட்டப்படும் அபாயம் தோன்றியுள்ளது. இந்த அபாய நிலை தவிர்க்கப் படவேண்டும். சமாதானப் பேச்சுக்கள் தொடரவேண்டும்.

ஜனாதிபதி சந்திரிகாவின் திடீர்த் தேர்தல் அறிவிப்பு பலரிடையே அதிர்ச்சியை உருவாக்கியுள்ளது. எனினும், இச் சமாதான முயற்சிகள் குறித்து ஐரோப்பிய ஒன்றியம் அவதானமாக இருக்கிறது. இதனடிப்படையில் ஐக்கிய தேசிய முன்னணி அரசு - புலிகளுக்கிடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம் தொடரப்படவேண்டும் என்பதையே ஐரோப்பிய ஒன்றியம் விரும்புகிறது.

எதிர்வரும் 2 ஆம் திகதி இடம்பெறவுள்ள பொதுத் தேர்தல் நீதியானதும் சுதந்திரமானதுமாக நடத்தப்படுவதுடன், சமாதான நடவடிக்கைகளுக்கு பங்கம் விளைவிக்காததாகவும் அமையவேண்டும் என்றார்.

கடந்த நவம்பர் மாதம் இவர் இலங்கைக்கு விஜயம் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (தி-61,4)

## அமைச்சர் டிரோனுக்கு தேசியப் பட்டியல் மூலம் வாய்ப்பு

(கொழும்பு)

கடந்த 2001 ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் தேசியப் பட்டியல் மூலம் போக்குவரத்துத் துறை அமைச்சர் திலக் மாரப்பனவும், அரசியல் விவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸும் பாராளுமன்றம் சென்றனர்.

ஆனால் இவர்கள் இருவருக்கும் பதிலாக இம் முறை நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய பட்டியல் மூலம் வெளிவிவகார அமைச்சர் டிரோன் பெர்னாண்டோ பாராளுமன்றம் செல்லவுள்ளார்.

இம் முறை நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் அமைச்சர்களான திலக் மாரப்பனவும், ஜி.எல்.பீரிஸும் வேட்பாளர்களாகப் போட்டியிடவுள்ளனர்.

இதனை அடுத்தே தேசியப் பட்டியல் மூலம் பாராளுமன்றம் நுழைவதற்கான.வாய்ப்பு அமைச்சர் டிரோன் பெர்னாண்டோவுக்கு கிடைத்துள்ளது. (தி-61)

## வெளிநாட்டுக் கண்காணிப்பாளர்களை கிழக்குக்கு அனுப்பக் கோரிக்கை

(ஏறாவூர்)


எதிர்வரும் பொதுத் தேர்தலில் வன் செயல்கள் இடம் பெறக்கூடிய சாத்தியக் கூறுகள் அதிகம் தென்படுவதால், வெளிநாட்டுத் தேர்தல் கண்காணிப்பாளர்களை கிழக்கு மாகாணத்திற்கு அதிகமாக அனுப்பிவைக்குமாறு முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவரும், அமைச்சருமான ரவூப் ஹக்கீம் கோரிக்கை விடுத்துள்ளார்.

ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் பொதுநலவாய அமைப்புகள் ஆகியவற்றின் பிரதிநிதிகளை நேற்று முன்தினம் தனது செயலகத்தில் வைத்துச் சந்தித்துப் பேச்சுவார்த்தைகளை நடத்தியபோதே ஹக்கீம் இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

எதிர்வரும் 2ஆம் திகதி நாடளாவிய ரீதியில் நடத்தப்படவுள்ள நாடாளுமன்றத் தேர்தலின் போது, கிழக்கு மாகாணத்தில் வன்செயல்களும், வாக்கு மோசடிகளும் இடம் பெறக் கூடிய சாத்தியப்பாடுகள் அதிகம் உண்டு.

இதனால் இம் மாகாணத்திற்கு அனுப்பி வைக்கும் தேர்தல் கண்காணிப்பாளர்களின் தொகையை அதிகரிப்புச் செய்யுமாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

இதற்குப் பதிலளித்த ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் பொது நலவாய அமைப்புக்களின் பிரதிநிதிகள் தற்போதைய தேர்தல் அறிவிப்பு திடீரென அறிவிக்கப்பட்டிருப்பதால் இதற்குரிய போதிய கால அவகாசம் இருக்கவில்லை என தெரிவித்தனர். (தி-61,4)



### சாயி அருளமுதம்

வாழ்க்கை ஒரு கீதமாகும். அதை இசையுங்கள். கிருஷ்ணர் தமது வாழ்க்கையினூடாக இதையே போதித்தார். உணர்வலைகள் உச்சகட்டத்திலும், பல இலட்சக்கணக்கானவர்களுடைய விதியைப் போர்வாள்கள் தீர்மானிப்பதற்கும் இருந்த யுத்த களத்தில் அர்ஜுனன் இந்தக் கீதத்தைக் கேட்டான். அர்ஜுனன் கேட்கும் படியாகக் கிருஷ்ணர் கீதையை அப்போது பாடினார். "கீத" என்பது பாட்டைக்குறிக்கும். கோகுலத்திலோ, யமுனா நதி தீர்த்தத்திலோ அல்லது குருஷேத்திரத்தில், சமர்புரியும் இரு சைனியங்களுக்கு நடுவிலோ எங்கிருந்தாலும், கிருஷ்ணர் ஆனந்த ஸ்வரூபராக இருப்பதனால் அதைப்பாடினார்.

நன்றி

நாளாந்த நற்சிந்தனை

## 6 வருடத்துக்குள் 5 தேர்தல்கள் 45 பில்லியன் ரூபா செலவு

(கொழும்பு)

நாட்டின் பல பாரிய பொருளாதாரப் பிரச்சினைகளுக்குப் பாவிக்கப்பட்டிருக்கக் கூடிய 45 பில்லியன் ரூபா நிதியை அரசு தேர்தல்களுக்கு மட்டும் செலவிட்டுள்ளது என்று இவ் வாரம் எடுக்கப்பட்ட தேசிய ஆராய்ச்சி புள்ளி விபரங்கள் மூலம் தெரியவந்துள்ளது.

நாட்டு மக்களிடமிருந்து வரி உள்ளிட்ட பல வழிகளிலும் பெறப்படும் பணமும், ஏனைய நீண்டகால கடன்களும், இப்படித் தேர்தலுக்கென செலவழிக்கப்படுவதற்குப் பதிலாக கல்வி, சுகாதாரம், வீட்டு வசதிகள், வீதிப்புனரமைப்பு, நீர், நில மற்றும் மின்சார வசதிகள் மற்றும் ஏழை மக்களுக்கான புனருத்தாரண உதவிகள் போன்றவற்றிற்குச் செலவழிக்கப்படுவதே மிகவும் சரியான முறையாக அமையும் என்றும் அரசியல் ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

கடந்த 1999 ஆம் ஆண்டில் ஜனாதிபதி தேர்தலும் 2000 ஆம் ஆண்டில் பாராளுமன்றத் தேர்தலும் 2001 ஆம் ஆண்டில் பாராளுமன்றத் தேர்தலும் 2002 ஆம் ஆண்டில் மாகாண சபைத்தேர்தலும் 2004 ஆம் ஆண்டில் பாராளுமன்றத் தேர்தலும் என்ற 5 தேர்தல்கள் குறித்தே இந்த ஆய்வில் ஆராயப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (தி-18)

# தேர்தல்களம்

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு போட்டியாக புதிய தமிழ்க் கூட்டணி

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத் தேர்தலில் வடக்கு - கிழக்குப் பகுதித் தமிழர்களைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முழுமையாகப் பிரதிநிதித்துவப்படுத்த முனைந்து வரும் நிலையில், புதியதொரு தமிழ்க் கூட்டமைப்பை ஆரம்பிக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி தலைமையில், இந்தக் கூட்டமைப்பை உருவாக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இக் கூட்டமைப்பில், ஈ.பி.ஆர்.எல்.எவ். வரதர் அணி, ஈரோஸ் இயக்கத்தின் சங்கர் அணி ஆகியவற்றுடன் புளொட்டையும் இணைத்துக் கொள்வதற்கு ஈ.பி.டி.பி. முயற்சிகளை மேற்கொண்டு வருவ்தாக அக்கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் தவராஜா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான இறுதி முடிவுகளை நாளை வெள்ளிக்கிழமை ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தாவே வெளியிடுவார் எனவும் தவராஜா மேலும் தெரிவித்துள்ளார். (தி-18)

## ஐ.தே.க - முஸ்லிம் காங்கிரஸ் இரகசிய உடன்படிக்கை கைச்சாத்து

### ஹிஸ்புல்லா குற்றச்சாட்டு

(கொழும்பு)

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கும், ஐக்கிய தேசியக் கட்சிக்கும் இடையே இரகசிய உடன்படிக்கை ஒன்று செய்யப்பட்டுள்ளதாகத் தேசிய ஐக்கிய முன்னணியைச் சேர்ந்த எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லா குற்றஞ்சாட்டியுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியுடனான இவ்வுடன்படிக்கையைக் கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப்ஹக்கீம் செய்து கொண்டுள்ளதாக ஹிஸ்புல்லா கூறியுள்ளார்.

நாடாளுமன்றத் தேர்தலை நோக்காகக் கொண்டே அமைச்சர் ரவூப்ஹக்கீம் இந்த உடன்படிக்கையை ஐக்கிய தேசியக் கட்சியுடன் செய்து கொண்டுள்ளார். எதிர்வரும் பொதுத் தேர்தலில் அனைத்து முஸ்லிம்களையும் ஒரே குடையின் கீழ் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையிலும், முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களை ஓரணியில் திரட்டுவதற்கும் முயற்சிகள் பல்வேறு தரப்பினராலும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இவற்றிற்கு முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் போதிய ஒத்துழைப்பு வழங்கவில்லை. இதனையடுத்தே, ஐக்கிய தேசியக் கட்சியுடன் தற்போது இரகசிய உடன்படிக்கையொன்று செய்து கொள்ளப்பட்டது. இதன் மூலம் முழு முஸ்லிம் சமூகத்துக்கும் ரவூப்ஹக்கீம் துரோகமிழைத்துள்ளார் என ஹிஸ்புல்லா குற்றஞ்சாட்டியுள்ளார். (தி-18)

உள்நாட்டு வெளிநாட்டு விமான ரிக்கட்
களுக்கும் பார்சல் சேவைகளுக்கும்
MANOJ EXPRESS SERVICE
MANOJ EXPRESS
The Finest Express Service in the Field
இல. 13, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
யாழ்.: 021 222 3916, 0777 801038
கொழும்பு: T.P.: 2390128, Fax: 2399650, Mob: 0777 517019

# ஜே.வி.பியின் மகுடிக்கு சுதந்திரக் கட்சி ஆடுகிறது

## கயந்த கருணாதிலக குற்றச்சாட்டு

(கொழும்பு)

3 வாரங்களில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி-மக்கள் விடுதலை முன்னணி கூட்டணி தமது சின்னத்தை 3 முறை மாற்றியுள்ளமை குறித்து ஐ.தே.மு.ஊடகப் பேச்சாளர் கயந்த கருணாதிலக கருத்து தெரிவித்துள்ளார்.

இதன்போது அவர், சுதந்திரக் கட்சியும் ஜே.வி.பியும் ஒருவருக்கொருவர் தமது கட்சிக் கொள்கைகளை விட்டுக்கொடுப்பது இது முதல் தடவையல்ல. இதைவிட அதிகாரத்திற்காக சின்னங்களிலும் விட்டுக் கொடுப்புச் செய்கிறார்கள்.

ஆனால், கடந்த 42 வருடங்களில் ஐக்கியதேசியக் கட்சி இவ்வாறு செய்தது கிடையாது. இக்கூட்டணி முதலில் தாமரை சின்னத்தையும், அடுத்தவாரம் வண்ணத்துப்பூச்சிச் சின்னத்தையும் 3வது வாரம் வெற்றிலை சின்னத்தையும் அறிவித்திருக்கிறது.

இக்கூட்டணிக்கு இன்னமும் தலைவா, தேசிய ஒருங்கமைப்பாளர், பொருளாளர் கிடையாது. கொள்கை விபரமும் இன்னமும் தயார் செய்யப்படவில்லை. இத்தகைய கூட்டணியால் எவ்வாறு ஒரு நாட்டை ஆளமுடியும்.

மக்கள் விடுதலை முன்னணியினதும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியினதும் தகுதிகாண் அரசாங்கத்தை மக்கள் இன்னமும் ஞாபகப்படுத்த முடியும். சம்பள உயர்வு தருவதாக உறுதியளித்திருந்தும் ஆயிரம் ரூபா மட்டுமே வழங்கப்பட்டது. உலக சந்தை விலையில் எரிபொருளை விற்பனை செய்வதாக உலக வங்கிக்கு வாக்குக் கொடுத்தார்கள். நீரை விற்பனை செய்யும் உடன்படிக்கையிலும் இலங்கை வங்கி, மக்கள் வங்கிகளை விற்பனை செய்யும் உடன்படிக்கையிலும் கையொப்பம் இட்டனர். ரணில் அரசாங்கத்தால் தமது கனவுகள் என்றும் நிறைவேறப் போவதில்லை என்பது தெரியும். இப்போது ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி, மக்கள் விடுதலை முன்னணியினர் மகுடிக்கு ஆடிக் கொண்டிருக்கிறது என்றார்.

(தி-06)

## 54 இலங்கையர் எகிப்தில் கைது

(கொழும்பு)

சட்ட விரோதமாக இத்தாலி செல்ல முற்பட்ட 54 இலங்கையர் எகிப்தின் கெய்ரோ நகரில் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் பயணம் செய்த படகையும் கெய்ரோ பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

கெய்ரோ பொலிஸார் 54 இலங்கையர் கைது செய்யப்பட்டுள்ளமை தொடர்பாக இலங்கை வெளிவிவகார அமைச்சுக்கு அறிவித்துள்ளதுடன், அவர்களை மீண்டும் இலங்கைக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்துள்ளனர். நீர்கொழும்பு கடற்பிரதேசம் ஊடாக புறப்பட்டுச் சென்றவர்களே எகிப்தில் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று ஆரம்ப விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது.

(த)

## கட்டடத்திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலய புதிய கட்டடத் திறப்பு விழா இன்று காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். அரச அதிபர் செ.பத்மநாதனும் சிறப்பு விருந்தினராக ஜி.ரி.சற் நிறுவனப் பொறியியலாளர் யோ.தயாபரனும் கலந்து கொள்ளவுள்ளனர்.

(ச)

# சுதந்திர முன்னணி ஆட்சியமைத்தால் உடன்படிக்கைக்கு பாதிப்பு ஏற்படும்

## அமைச்சர் பீரிஸ் கருத்து

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத்தேர்தலில் மக்கள் ஐக்கிய சுதந்திர முன்னணி ஆட்சிப் பீடம் ஏறினால், போர் நிறுத்த புரிந்துணர்வு உடன்படிக்கை பாதிக்கப்படும் என்பது உறுதியாகிவிட்டது.

ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையே கைச்சாத்தான யுத்தநிறுத்த புரிந்துணர்வு உடன்படிக்கையின் எதிர்காலம் குறித்து சிக்கல்கள் பல ஏற்பட்டுள்ளதாக அமைச்சர் பேராசிரியர் பீரிஸ் எச்சரித்துள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அமைச்சர் பேராசிரியர் பீரிஸ் மேற்கண்டவாறு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அவ் ஊடகவியலாளர் மாநாட்டில் ஜீ.எல்.பீரிஸ் மேலும் தெரிவித்திருப்பதாவது,

அரசும் விடுதலைப்புலிகளும் செய்துகொண்ட யுத்த நிறுத்த உடன்படிக்கை தொடர்பாக மக்கள் விடுதலை முன்னணி கொண்டுள்ள நிலைப்பாடே இத்தகைய பல சிக்கலான பிரச்சினைக்குக் காரணமாகும்.

தற்போதுள்ள யுத்த நிறுத்த உடன்படிக்கையைத் திருத்தியமைப்பதற்கு இரு தரப்பினரது உடன்பாடு அவசியம் தேவை. ஒரு தரப்பினருடைய விருப்பத்துடன் யுத்தநிறுத்த உடன்படிக்கையை மேற்கொள்ள முடியாது. தற்போதைய யுத்தநிறுத்த உடன்படிக்கையை நிராகரித்தால்தான் புதிய உடன்படிக்கை ஒன்றை ஏற்படுத்திக்கொள்ள முடியும். யுத்தநிறுத்த உடன்படிக்கை இல்லாமல் யுத்த நிறுத்தத்தை ஏற்படுத்த முடியாது.

இந்த யுத்தநிறுத்த உடன்படிக்கையை நிராகரித்தால் ஆரம்பத்திலிருந்தே யுத்த நிறுத் உடன்படிக்கை ஒன்று இல்லையென்பதாகிறது. இந்நிலையிலேயே இந்த யுத்தநிறுத்த உடன்படிக்கை தொடர்பாக எதிர்காலத்தில் பல பிரச்சினைகள் தோன்றக் கூடியதாக உள்ளதென்றும் அமைச்சர் பீரிஸ் மேலும் தெரிவித்துள்ளார்.

(ம)

### யாழ் மாவட்ட...

65 ஆயிரத்து 218 வாக்காளர்களும் உடுப்பிட்டியில் 54 ஆயிரத்து 87 வாக்காளர்களும் பருத்தித்துறையில் 45 ஆயிரத்து 457 வாக்காளர்களும் சாவகச்சேரியில் 57 ஆயிரத்து 379 வாக்காளர்களும் யாழ்ப்பா ணத்தில் 57 ஆயிரத்து 460 வாக்காளர்களும் கிளிநொச்சியில் 57 ஆயிரத்து 975 வாக்காளர்களும் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

(தி-16,19)

### கூட்டமைப்பு...

முன்னர் தமிழ்க் கூட்டமைப்பு எந்தச் சின்னத்தில் போட்டியிடுவது என்பது குறித்தும் வேட்பாளர் பட்டியல் தெரிவும் தீர்மானிக்கப்பட்டுவிடும் என்று குறிப்பிட்டார். முன்னாள் எம்.பி. சிவாஜிலிங்கம் எதிர்வரும் 25 ஆம் திகதி கிளிநொச்சியில் கூட்டமைப்பினர் கூடி கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனத்தை தயாரிப்பர் என்றும் தெரிவித்தார்.

(இ)

### சந்திரசேகரன்...

அதற்கேற்ப வாய்ப்புக்களுடன் மலையக மக்கள் முன்னணி தேர்தலில் பங்கு கொள்ளும், இது பற்றிய இறுதி முடிவு ஓரிரு நாட்களில் எடுக்கப்படும். இதற்காக மீண்டும் வன்னிக்கு வந்து விடுதலைப் புலிகளுடன் கலந்துரையாடப்படும் என பெ.சந்திரசேகரன் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை நேற்று மேல் மாகாண மக்கள் முன்னணியின் தலைவர் மனோகணேசன் குழுவினரும் தனியாக விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளருடன் கலந்துரையாடலை நடத்தினர். தமிழ்த் தேசிய கருமங்களை வலுப்படுத்த தாம் தயார் என்பதை தெரிவித்துள்ளதாகவும் மேல் மாகாண அரசியல் நிலைப்பாடுகளால் ஐக்கிய தேசிய முன்னணியுடன் இணைந்தே தேர்தலில் போட்டியிடவுள்ளதாகவும் மனோகணேசன் தெரிவித்துள்ளார். ஆயினும் ஐக்கிய தேசிய முன்னணியிலிருந்தே தான் தமிழ்த் தேசிய ஐக்கியத்துக்கு ஆதரவாக செயற்படப் போவதாகவும் அவர் மேலும் கூறினார்.

(த-43)

### இந்திய மீனவர்...

67 இந்திய மீனவர்கள் இப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இவர்களில் 5 பேரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதால் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். ஏனையோர் தொடர்ந்தும் போராட்டத்தில் ஈடுபட்டு வருவதாக சிறைச்சாலை அத்தியட்சகர் தெரிவித்துள்ளார்.

(தி-19)

### வன்னி மாவட்ட...

ரெலோ அமைப்பின் சார்பில் செல்வம் அடைக்கலநாதன், நோகாதரலிங்கம், ஈ.பி.ஆர்.எல்.எவ். சுரேஷ் அணி சார்பில்; சிவசக்தி ஆனந்தன், தமிழ் காங்கிரஸ் சார்பில் அப்பாத்துரை விநாயகமூர்த்தியும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகளில் ஒருவரான சிவநாதன் கிசோர் மற்றும் மன்னார் முல்லைத்தீவு ஆகிய பிரதேசங்களில் இருந்து தலா இருவரும் வேட்பாளர் பட்டியலில் இடம்பெற்றுள்ளதாகத் தெரிய வருகிறது.

மேலும் வேட்பாளர் பட்டியலில் முஸ்லிம் வேட்பாளர் ஒருவா உட்பட பெண் வேட்பாளர் ஒருவரும் இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(த-13)

### முகமாலைச்...

கடமைகளை முடித்துக்கொண்டு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் அங்கிருந்து வெளியேறி வருகிறது.

இந்நிலையில் அங்கு இரவு 9 மணிவரை கடமையில் இருக்கும் போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு, சோதனைச்சாவடி கண்காணிப்புப் பணியில் ஈடுபடும் பொறுப்பு தமக்கு இல்லையென்று குறிப்பிடுகின்றது. இதனாலேயே சோதனை நிலைய கண்காணிப்புப் பணியில் ஈடுபடும் சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்கம் தமது கடமையை நிறைவு செய்யும். மாலை 6.30 மணியுடன் சோதனை நிலையத்தையும் மூடவேண்டியுள்ளதாக பலாலி பாதுகாப்பு நடவடிக்கைத் தலைமையகம் தெரிவித்துள்ளது.

(ச)

### புலிகளுக்கு...

நாயகத்தினால் வழங்கப்பட்ட ஒரு சில விண்ணப்பங்களை பரிசீலனை செய்ததில், அதில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தீவிர ஆதரவாளர்கள் - கடந்த தேர்தல் காலஙகளில் பல இன்னல்களுக்கு முகங்கொடுத்து உழைத்தவர்களின் விண்ணப்பங்கள் எதுவும் இருக்கவில்லை.

இந்நிலையில் குறுகியகால அறிவித்தல் கொடுத்து விண்ணப்பங்களைப் பெறலாம் என்று நான் யோசனை கூறியபோது சிலர் விரும்பவில்லை. சிலர் மௌனம் சாதித்தனர்.

கடந்த தேர்தல் காலங்களில் பல இன்னல்களுக்கு முகங்கொடுத தவர்களுக்கு வேட்பாளர் தெரிவில் முன்னுரிமை வழங்கப்பட வேண்டும். இதற்கு நீங்கள் இணங்காத பட்சத்தில் எமது கட்சி வேட்பாளர்கள் தேர்தலில் போட்டியிடாது, விடுதலைப் புலிகளிடமே வேட்பாளர்களை நிறுத்துமாறு கூறி அவர்களால் நிறுத்தப்படும் திறமை வாய்ந்த வேட்பாளர்களுக்கு ஒத்துழைப்புக் கொடுத்து அவர்களை வெற்றி பெறச்செய்வோம் என்று சபையில் கூறிவிட்டு நான் வெளியேறி விட்டேன்.

இன்றைய சூழலில் எமது கட்சியின் நலனைப் பாதுகாக்க சிறந்த வழி இதுவென நான் கருதுகின்றேன் என்றும் அந்த அறிக்கையில் சங்கரி மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை தேர்தல் நியமனக் குழுவின் கூட்டம் மீண்டும் 2 நாட்களின் பின் நடைபெறவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

(ம)

# பொலிஸ்மா அதிபரின் பதவி ஆறு மாத காலம் நீடிப்பு

(கொழும்பு)

பொலிஸ்மா அதிபர் இந்திரா டி.சில்வாவின் பதவிக் காலத்தை மேலும் 6 மாதங்களுக்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா நீடித்துள்ளார்.

ஏப்ரல் மாதம் 2-ந் திகதி நடைபெறவுள்ள பாராளுமன்ற பொதுத் தேர்தலையும் மாகாணசபைத் தேர்தலையும் கருத்தில் கொண்டே பொலிஸ்மா அதிபரின் பதவிக் காலத்தை மேலும் 6 மாத காலத்திற்கு நீடித்திருப்பதாக ஜனாதிபதியினால் பொலிஸ்மா அதிபருக்கு எழுதப்பட்டுள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(ம)

### தமிழ்ச்செல்வ...

பெறவுள்ள பொதுத்தேர்தலில் போட்டியிடும் கூட்டமைப்பு உறுப்பினர்களின் தெரிவு தொடர்பான இறுதி முடிவு எடுக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கூட்டமைப்பினருக்கும் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனுக்குமிடையிலான சந்திப்பு நேற்றுமுன்தினமும் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

(ச)

## நீதியரசர்களுக்கு கராச்சியில் மாநாடு

(கொழும்பு)

தெற்காசிய பிராந்திய பிரதம நீதியரசர்களின் மாநாடு இன்று வியாழக்கிழமை கராச்சியில் ஆரம்பமாகவுள்ளது.

நான்கு நாட்கள் வரை தொடர்ந்து நடைபெறும் இம்மாநாட்டில் பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா தலைமையிலான நீதிபதிகள் கொண்ட குழுவினர் இலங்கையின் சார்பில் கலந்து கொள்ளவுள்ளனர்.

உலகமயமாக்கல் என்பதன் பின்னணியில் தெற்காசிய பிராந்திய நீதித்துறையில் கொண்டு வரப்பட வேண்டிய மாற்றங்கள் பற்றி இம்மாநாட்டில் ஆராயப்படவுள்ளது.

(தி-60,10)

விற்பனைக்கு உண்டு

எமது சொந்த பாவனையிலுள்ள 'சக்தி' லாண்ட்மாஸ்ரர், பெட்டியுடன் விற்பனைக்கு உண்டு.

பார்வையிட விரும்புவோர் திங்கள் முதல் வெள்ளி வரை பணிமனை நேரத்தில் பார்வையிடலாம்.

விபரங்களுக்கு:
அறவழிப் போராட்டக்குழு (NVDAG)
29, கைதடி நுணாவில்,
சாவகச்சேரி.
T.P.: 0777 111 494

(8265)

## மரண அறிவித்தல்

### திரு.இராமசாமி பரராஜசிங்கம்

*(சிங்கம் புடைவையகம், உரிமையாளர் - யாழ்ப்பாணம்)*

சங்கானையைப் பிறப்பிடமாகவும் கந்தர்மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட இராமசாமி பரராஜசிங்கம் நேற்று 18.02.2004 புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் இராமசாமி தெய்வானைப்பிள்ளையின் சிரேஷ்ட புத்திரனும், செல்லத்துரை சிவபாக்கியம் தம்பதிகளின் மருமகனும் குணபாக்கியலட்சுமியின் (குகா) அன்புக் கணவரும் நவமணி, குமாரசிங்கம் (கொழும்பு), குலசிங்கம் (U.K), பூலோகசிங்கம் (பரீஸ்), துரைசிங்கம் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் விஜயலட்சுமி (கனடா), ராஜலட்சுமி (கொழும்பு), குகராஜசிங்கம் (U.K), ரவிராஜசிங்கம் (U.K), காலஞ்சென்ற ஜெவிராஜசிங்கம், தர்ஜலக்சுமி (மாத்தளை), விஜித்தா (கொழும்பு), குலராஜசிங்கம் ஆகியோரின் அன்புத் தந்தையும் சுகுணதாசன் (கனடா) சுதாகரன் (கனடா), பாலஜிதா (கொழும்பு), நிரோஜன் (குவைத்) ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்ற தனலட்சுமி, கனகலட்சுமி (மலேசியா), இராமகிருஷ்ணன் (மலேசியா) விவேகானந்தன் (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனரும், சுலக்சி, ஜொயினா, பிரிவிஷா, தம்பி ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் பற்றிய விபரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

இல.170, அரசடி வீதி,
கந்தர்மடம்.
T.P.: 021 222 6768

தகவல்:
திருமதி கு.பரராஜசிங்கம்
*(மனைவி)*

(C 7277)

இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 19.02.2004 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.